பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | மாசி 04 | திங்கட்கிழமை | (16-02-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 59

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# எதிர்வரும் தேர்தலில் போட்டியிட மாட்டேன்!

## முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் அறிவிப்பு

(எமது காரைநகர்ச் செய்தியாளர் ஐங்கரன்)



**தற்போதைய அரசியலில் காணப்படும் நெருக்கடியான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு யாழ்.குடாநாட்டு அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாக முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தனது சொந்த இடமான காரைநகரில் வைத்து தெரிவித்துள்ளார்.**

சுமார் 50லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையகக் கட்டடத்தை திறந்து வைத்துப் பேசும் போதே முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார்.

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ஆ.சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

தற்போதைய அரசியல் நெருக்கடியை கருத்திற் கொண்டு தமிழ்பேசும் மக்கள் மத்தியில் காணப்படுகின்ற ஒற்றுமையைக் குலைக்கக்கூடாது என்றதொரு நோக்குடனும், அந்த ஒற்றுமையைப் பலப்படுத்தும் நோக்குடனுமே யாழ்.குடாநாட்டு அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொள்ளத் தீர்மானித்துள்ளேன்.

கடந்த மூன்றரையாண்டுகளாக ஐ.தே. கட்சியின் பிரதிநிதியாக இரண்டு முறை பாராளுமன்றம் சென்று எம்.பியாகவும், அமைச்சராகவும் இருந்து யாழ்.குடாநாட்டு மக்களுக்கு சேவையாற்றி வந்துள்ளேன்.

என்னால் ஆரம்பித்து வைக்கப்பட்ட பலதரப்பட்ட அபிவிருத்திப் பணிகளை எனக்குப் பின்னால் வரக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொள்ள வேண்டும்.

எனது பிரதேசத்தின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டே ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து போட்டியிட்டேன். இதனைவிட எதிரியை முகம்கொடுக்கக் கூடிய ஒரு சக்திகளின் ஊடாகப் போட்டியிட்டு பாராளுமன்றம் செல்லவேண்டும் என்று தீர்மானித்தே அக் கட்சியில் போட்டியிட்டேன். கடந்த தேர்தல்களில் எனது வெற்றிக்

(12ம் பக்கம் பார்க்க)

## 28 வரையான புலி எம்.பிக்கள் பாராளுமன்றுக்கு வருவர்

### எதிர்வு கூறுகின்றார் சிஹல உறுமய தலைவர்

(கொழும்பு)

மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியில் சிஹல உறுமயவும் இணையவுள்ளதாக வெளியாகிய செய்திகளை சிஹல உறுமய தலைவர் திலக் கருணாரட்ன மறுத்துள்ளார். தம்மையும் கூட்டணியில் சேருமாறு எந்தவித அழைப்பையும் கூட்டணி தம்மிடம் விடுவிக்க வில்லை அவர்கள் அவ்வாறு அழைப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் அவர்கள் அழைத்தாலும் கூட நாம் அவர்களுடன் இணைய மாட்டோம் என்றார்.

மேலும் கடந்த தேர்தலில் போலவே இம் முறையும் சிஹல உறுமய யாழ்.மாவட்டத்திலும் போட்டியிடும். மேல்மாகாணத்திலும் கண்டி, குருநாகல, காலி, மாத்தளை, கேகாலை, ரட்ணபுர, அம்பாறை போன்ற இடங்களிலும் போட்டியிடுவோம், மட்டக்களப்பையும், வன்னியையும் தவிர சகல மாவட்டங்களிலும் போட்டியிட தீர்மாணித்துள்ளோம்.

மட்டக்களப்பு அம்பாறை போன்ற இடங்களில் போட்டியிடுவதற்கு ரவூப் ஹக்கீம் தன்னுடைய வேட்பாளர்களை அனுப்புவார். ஆனால் அவர்கள் வென்றுவிடப் போவதில்லை, என்றும் கூறினார். பாராளுமன்றக் கலைப்பு பற்றி அவர் தெரிவிக்கையில்.

பொ.ஜ.மு, ஜே.வி.பி மாறுபட்ட

(12ம் பக்கம் பார்க்க)

## தலைவருடன் கலந்துரையாடிய பின் தேர்தல் பற்றி கருத்துக் கூறமுடியும்

### கிளிநொச்சியில் தமிழ்ச்செல்வன் அறிவிப்பு

(கிளிநொச்சி)

இலங்கையின் தேர்தல் தொடர்பாகத் தலைவர் வே.பிரபாகரனுடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்ட பின்பே ஆக்க பூர்வமான விடயங்களை வெளிப்படுத்த முடியும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகளுக்கிடையிலான பயணத்தை மேற்கொண்ட பின் கிளிநொச்சி திரும்பிய சு.ப. தமிழ்செல்வன் கிளிநொச்சி மத்திய மைதானத்தில் வைத்து ஊடகவியலாளர்களைச் சந்தித்த போதே இதனைத் தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் 2.00மணியளவில் இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சி மத்திய மைதானத்தில் வந்திறங்கிய தமிழ்ச் செல்வன் ஐரோப்பிய நாடுகளுக் கிடையிலான பயணம் ஆக்கபூர்வமானதாக அமைந்ததாக தெரிவித்தார்.

தமது பயணத்தின் போது பல்வேறு நாடுகளின் தலைவர்களை சந்தித்து சமாதான முயற்சிகளில்

(12ம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பிற்கான சின்னம் 18ம் திகதி தீர்மானிக்கப்படும்

(கொழும்பு)

ஏப்பிரல் மாதம் 2ம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தலில் எக் கட்சியின் சின்னத்தில் போட்டியிடுவதென்பது குறித்து 18ம் திகதி புதன்கிழமை முடிவு செய்வதென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நேற்றுக் கூடி தீர்மானித்துள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எந்தக் கட்சிகளின் சின்னத்தில் போட்டியிடுவதென்று நேற்றுக் கொழும்பில் கூடி ஆராய்ந்த போதே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுவதற்கு இடைஞ்சலாக உள்ள சட்ட சிக்கல்களை அடுத்தே

(12ம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்பு குழுத் தலைவர் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டின் நிலைமைகளை நேரில் பார்வையிடுவதற்காக இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரொன்பியூறு ஹெவ்டே இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்கிறார்.

இருநாள் விஜயம் மேற்கொண்டு இங்கு வரவுள்ள ரொன்பியூறு ஹெவ்டே குடாநாட்டில் நிலைமைகள் குறித்து அரச அதிகாரிகள், இராணுவ படைத் தளபதிகள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் ஆகியோருடன் பேச்சு வார்த்தைகளை நடத்தவுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை முடித்துக் கொண்டு நாளை மறுதினம் புதன்கிழமை மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்குச் செல்லவுள்ளதாக தெரியவருகிறது.(த-18)

## பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்த முன்னாள் எம்.பிக்கள் 8 பேர் ஐ.தே.முன்னணியில் இணைவர்

(கொழும்பு)

பொதுத்தேர்தல் அறிவிப்பு வெளியாகியுள்ள நிலையில் 8 முன்னாள் பொ.ஐ.மு. பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐ.தே.முன்னணியில் இணைந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்னாள் அமைச்சரவை அமைச்சர்களான ரொனி டி மெல் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே, எ.எச்.எம். பௌசி, சலிந்த திஸ்ஸநாயக்க ஆகியோரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான திரின பண்டார தென்னக்கோன், மலிக் டி.மெல், சரண குணவர்த்தன ஆகியோரே இவர்களாவர்.

பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்த இவர்கள் சமீபத்தில் பொ.ஐ.மு., ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்தமையால் அதிருப்தி கொண்டிருந்தனர். இதனாலேயே இம் முடிவுக்கு வந்துள்ளனர் என ஐ.தே.மு. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆனால், தான் ஐ.தே.கவில் இணையும் சாத்தியங்கள் இல்லை

(12ம் பக்கம் பார்க்க)

## பொலிஸாருக்கான விடுமுறை ஏப்ரல் 15-ம் திகதி வரை ரத்து

### பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலை முன்னிட்டு பொலிஸாருக்கான விடுமுறைகள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.. இதற்கான உத்தரவை பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா விடுத்துள்ளார்.

நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை முதல் நாடளாவிய ரீதியில் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன. அத்துடன் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு நாளை முதல் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி வரை பொலிஸாருக்கான விடுமுறைகள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன என பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ச)

# குடாநாட்டு மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்கு பாடசாலை சார்ந்த சங்கங்களே காரணம்

**குடாநாட்டு மாணவர்களின் கல்வித்தரத்தை வீழ்ச்சியடையச் செய்வது பாடசாலை சார்ந்த சங்கங்களே என்பதை விவாத அரங்கு இடித்துரைக்குமா?**

## விவாத அரங்கு

**விக்ரன்**

நல்லதோர் கடடுமானப் பணபுடனும் கலை கலாசார விழு மியங்களுடனும் கூடிய இவ்விணைத் திறன் மிக்க ஒரு சமூகத்தை உருவாக்கும் உன்னத நிறுவனம் பாடசாலையாகும். கணனி யுகத் துடன் கூடிய சமகாலச் சமூக உலகமயமாக்கலுடன் இணைந்து உயிர்ப்புடனும், துடிப்புடனும் செயற்பட இக்காலத்தில் பங்கு

றோர்கள், மாணவர்கள், ஆசிரியர் கள், கல்வியதிகாரிகள் என்பவற் றுக்கு மேலாக மறைந்து நின்று செயற்படும் சங்கங்களையும் சமூ கங்களையும் சிந்திப்பது சாலப் பொருத்தமானதே!

ஒரு பாடசாலையின் முதற்தர முகாமையாளர் அப்பாடசாலை யின் அதிபரே. அவர் ஆளுமை மிக்கவராக செயற்படும்போதே

புகள் ஆகியவையும் இவற்றிற்கு உரமூட்டுபவையாக அமைந்துள் ளன.

தொழிற்சங்கங்கள் மாணவர் களின் கல்விக்கு உந்துசக்தியா கவும், பங்காளிகளாகவும் செயற் படுவதற்குப் மைல்கல்லாக இருப் பதற்குப் பதிலாக தடைக்கல்லா கவே அமைந்துள்ளன. பாடசா லைக்குப் பொருத்தமான அதிபர்,

வருகின்றனர். இவர்களை நகர்த்த முயன்றால் சங்கங்களும், சமூக அமைப்புகளும் போர்க்கொடி காட் டும்.

ஆற்றல் இருப்பினும் கூட குறித்த சில பிரமுகர்களின் திறமை குறைந்த பிள்ளைகளுக்கே முக்கியத்துவம் வழங்கப்படுகிறது எனவே இந் நடவடிக்கை குடாநாட்டின் கல்வித்தரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை விவாத அரங்கு எண்ணாமல் விட்டமை வேதனைக்குரியது.

ஆசிரியர் நியமனங்களுக்கு முட் டுக்கட்டையாகவுமுள்ளன. அனை த்து ஆசிரியர்களிடமும் அங்கத் துவப் பணம்பெறுவதில் முழுமூச் சுடன் செயற்படும் அதேவேளை யில், குறிப்பிட்ட சில ஆசிரியர் களின் நலன்களிலும் தாய்ச்சங்க, கிளைச்சங்க நிர்வாகிகளுக்கும், அவர்களின் ஆதரவாளர்கட்கும் வக்காளத்து வாங்குவதாகவே யுள்ளன. இதனால் கல்வியதிகாரி கள் தாழ்மையுடன் மாணவர்களின் நலன்கருதி தமது செயற்பாட்டை நடைமுறைப்படுத்தவும் முடியா துள்ளது.

இவற்றுக்கு ஆதாரமாகக் கிரா மப்புறப் பாடசாலைகள் விளங்கு கின்றன. இப்பாடசாலைகளில் பொருத்தமான ஆசிரியர்களை இடமாற்றம் செய்து கல்வியில் சமவாய்ப்பை ஏற்படுத்தமுடியா துள்ளது. வளப்பற்றாக்குறையுள்ள

எனவே, தொடர்ந்தும் கஷ்டங் களை அனுபவிக்கும் ஆசிரியர் களின் மனநிலை மாணவர்களின் கல்வித்தரவீழ்ச்சியின்படிக்கற் களில் ஒன்று என்பதை விவாத அரங்கு மறந்தது ஏன்?

குடாநாட்டின் சில பாடசாலைகளி லும் கல்லூரியிலும் குறிப்பிட்ட சில அம்சங்கள் பொருந்தியவர் களே அதிபராக முடியும். மாறாகத் தகுதிக்கும், ஆற்றலுக்கும், ஆளு மைக்கும் சங்கங்களோ, சமூக அமைப்புக்களோ உரிய இடம்

ஆங்கிலக் கல்வியே எதிர் காலத்தில் வாழ்வாதாரம் என கல்வியியலாளர்களும் சமூக வியலாளர்களும் மேடைப்பேச்சுக் களாலும், கட்டுரைகள் வாயிலாக வும் வலியுறுத்தி வருகின்றனர்.

எத்தனையோ கிராமப் புறப் பாட சாலை மாணவர்கள் ஆங்கில ஆசிரியரா? அவர் எப்படி இருப்பார்

கொள்முகாமைத்துவமே பொருத் தமானது என்பது கல்வியியலா ளர்களதும், சமூகவியலாளர்கள தும் கருத்தாகும். இன்று இங்கே அரசுசார்ந்த, தனிப்பட்ட பாடசாலை முகாமைத்துவம் அதாவது மதம் சார்ந்த, அமைப்புகள் சார்ந்த கல் விக்கூடங்கள் யாவும் அரசு என்ற அமைப்பின் சட்டவரையறைக்குள்

மாலுமி கப்பலை சமுத்திரத்தில் எவ்வாறு கட்டுப்பாட்டில் வைத்தி ருக்கின்றானோ அவ்வாறே பாட சாலைச் சமூகத்தைத் தன் கட் டுப்பாட்டில் வைத்திருக்க முடி யும். சமுத்திரத்தில் காலநிலைச் சீரின்மையால் ஏற்படும் அனர்த் தங்களை எந்தளவுக்குச் சீர்செய்து கப்பலைச் கப்டின் இயக்குகின்

கொடுப்பதில்லை. இதற்கு வச்சி ராயுதமாகப் பாரம்பரியம் என்ற கவசம் பொருந்தப்பட்டுள்ளது. இந்த இறுக்க நிலை வளர்ந்து கொண்டு செல்வது கல்வி வீழ்ச்சி க்கான மற்றொரு படிகள் என்பதை விவாத அரங்கு இடித்துக் கூறுமா?

கிராமப் புறப் பாடசாலைப் பிள் ளைகள் புலமைப்பரிசில் பரீட்சை யில் சித்தியடைந்து நகரப்புறப் பாடசாலைகளை நாடிச் சென்றா லும் தேசிய ரீதியிலான வெட்டுப் புள்ளிக்கு மதிப்பளியாது பாட சாலை அமைப்புக்கள் அதற்கு மேலாகத் தாமே ஒரு வெட்டுப்புள் ளியை நிர்ணயித்து பாடசாலை சார்ந்த சங்கங்கள் ஆயிரக்கணக் கான ரூபாக்களை நிர்ணயிக் கின்றன.

இத் தடைகளை தாண்டி அனுமதி பெற்றாலும் இணைப் பாட விதானச் செயற்பாடுகளில்

என்று எண்ணி அங்கலாய் ப்பது வேதனைக்குரியதே மாறா கக் கிராமத்துப் பாடசாலைகளில் கார்த்திகைப் பிறையாகவுள்ள ஆங்கில ஆசிரியர்களையும் மின் னாமல் முழங்காமல் சில பாட சாலைச் சங்கங்கள் வளமுள்ள பாடசாலைகளுக்கு கபளீகரம் பண்ணிக் கொள்வது குடாநாட்டின் கிராமப் புறப் பாடசாலை மாணவர் களின் சமவாய்ப்பை தட்டிப்பறித் துக்கொள்வதை விவாத அரங்கு சம்பந்தப்பட்டவர்க்கு இடித்துரைக் குமா?

எத்தனையோ குறைபாடுகள் மலிந்த யாழ்.குடாநாட்டு மாணவர் களின் கல்வித் தரத்தை வீணடிக்க ஆசிரியர்களையும், மாணவர் களையும், பெற்றோர்களையும் மட்டும் விவாதஅரங்கு குறை கூறவது பொருந்தமான தல்ல.

**பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி அதிகாரிகள் மட்டும் கல்வித்தர வீழ்ச்சிக்குக் காரணகர்த்தாக்கள் அல்ல**

கட்டுப்பட்டு கல்வியில் சமவாய்ப் பினை வழங்க முன்வருகின்றது எனக் கூறப்படுகின்றது. இதனை நெறிப்படுத்துகையில் பாடசாலைச் சமூகம் பல சங்கங்களின் தடை களை ஊடறுத்துச் செல்லவேண்டிய சங்கட நிலைமையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே, விவாத அரங்கினைத் துடிப்புடனும், உயிரப் புடனும் நகர்த்திச்செல்லப் பெற்

றானோ அத்தகைய சவால்களை சமூகம் என்ற சமுத்திரத்தில் பாடசாலையின் முகாமையாளர் என்ற வகையில் பாடசாலை அதிபர் எதிர்நோக்க வேண்டியுள் ளது. இந்நிலை மாணவர்களின் கல்வியில் தாக்கத்தை ஏற்படுத் துமன்றோ? இத்துடன் தொழிற் சங்கங்கள், பாடசாலை சார்ந்த சங்கங்கள், சில சமூக அமைப்

பாடசாலையில் நியமிக்கப்பட்ட வர்கள் (மாட்டிக் கொண்டவர்கள்) பல வருடங்களாக இவர்களுக் குச் சந்தாப்பணத்தைமட்டும் செலுத்திக்கொண்டு விரக்தியுடன் கடமையாற்றுகின்றனர். மாறாக குறிப்பிட்ட சிலர் வளமான பாட சாலைகளில் வசதிவாய்ப்புகளுடன் நீண்டகாலமாக கடமையாற்றி

---

## பொதுத்தேர்தலில் வாக்களிக்க 1கோடி 28இலட்சம் பேர் தகுதி

(புத்தளம்)

இம்முறை நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் வாக்களிப்பதற் காக நாடளாவிய ரீதியில் 1 கோடி 28 இலட்சத்து 99 ஆயிரத்து 32 பேர் தகுதி பெற்றுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

நாடளாவிய ரீதியிலுள்ள அனை த்து மாவட்டங்களிலும் திரட்டப்பட்ட புள்ளிவிபரங்கள் மூலமே இவ்வெண் ணிக்கை கணிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த முறை நடைபெற்ற பொதுத்தேர்தலில் வாக்களிப்பதற்குத் தகுதிபெற்றவர் களை விட, இவ்வாண்டு மேலதிக மாக 4 இலட்சத்து 70 ஆயிரத்து 324 பேர் வாக்களிக்கும் உரிமை பெற்றுள்ளனர். (த-15)



**கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகத்தின் நாற்பதாவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கத்தின் சேவைநலன் பாராட்டு விழாவில் கலந்துகொண்டோரைப் படத்தில் காணலாம்.**

## புத்தளத்தில் இருவேறு சூட்டுச் சம்பவம் பொ.ஐ.மு. ஆதரவாளர் மூவர் காயம்

(புத்தளம்)

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி பொதுத்தேர்தல் நடை பெறும் என ஜனாதிபதியால் அறி விக்கப்பட்டதைத் தொடர்ந்து புத் தளம் மாவட்டத்தில் இருவேறு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இருவேறுவேறான இடங்களில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில், பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் மூவர் படுகாயமடைந்து சிலாபம் மற்றும் இறாகம வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

மேற்படி சம்பவங்கள் பற்றித் தெரியவருவதாவது,

கடந்த வெள்ளியன்று ஆராய்ச் சிக்கட்டுப் பிரதேச சபையில் எதிர்க்கட்சித் தலைவர் சனத் நிஷாந்தவின் வீட்டின் மீது இனந் தெரியாதோர் மேற்கொண்ட துப் பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

அத்துடன், சனிக்கிழமை இரவு மாறவில என்ற இடத்தில் நாத் தாண்டியாப் பிரதேச ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத் தில் பொதுஜன ஐக்கிய முன்ன ணியின் ஆதரவாளர்கள் இருவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இச்சூட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையோரைக் கைது செய்ய புத்தளம் பொலிஸார் தீவி ரமாகத் தேடுதல் நடாத்தி வரு கின்றனர்.

ஆராய்ச்சிக் கட்டுப் பிரதேசத் தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட் டுச்சம்பவம் தொடர்பாக இருவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய் யப்பட்டுள்ளனர். மேற்படி தாக் குதல் சம்பவத்திற்குப் பயன் படுத்தப்பட்டதாகக் கருதப்படும் உழவு இயந்திரம் ஒன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

## நாய்களுக்கு தடுப்பூசி

(தும்பளை)

கற்கோவளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள வளர்ப்பு நாய் களுக்கு இன்று திங்கட்கிழமை கூட்டுறவுச் சங்கத்திற்கு அருகாமையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் வைத்து விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக அப்பகுதி சுகாதாரப் பரிசோதகர் எஸ்.ரவிச் சந்திரன் அறிவித்துள்ளார்.

(தி-24)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

47

## தேசவழமை அத்தியாயம் 5

### ஒற்றியும் ஈடும்

### மிருகங்களைப் பாவிப்பதற்காகப் பணம் கடன் கொடுத்தல்

7. ஒருவன் வேறொருவனுக்குச் சில பணங்களைக் கடன் கொடுத்துக் கடன்காரன் வட்டி கொடுப்பதற்குப் பதிலாகத் தான் கடனாளியாய் இருக்கிற வரையில் கடன் கொடுத்தவனுடைய காணி உழுவதற்காக இன்ன எருத்துமாடு கடாமாடென்று குறியாமல் வருஷத்துக்கு வருஷம் எருத்துமாடு அல்லது கடாமாடு அல்லது அதிகம் கொடுப்பேனென்று பொருந்திக் கொண்டால், அந்த நாள் வரையில் உழும்படிக்குக் கொடுத்த மாடுகளில் ஒன்றென்கிலும் அதிகமென்கிலும் கடன் கொடுத்தவன் வசத்தில் நிற்கும் போது செத்து விட்டதேயுண்டானால், உடையவன் அவன் காணிகள் உழுது முடியுமளவாக அவன் வசத்தில் நிற்கும் படிக்கு இறந்து போன மாட்டுக்குப் பதிலாக மறு மாடு கொடுக்க வேண்டியது. பொறுப்பிலிருந்து தன்னை நீக்கிக்கொள்ளலாம்.

### பொன் வெள்ளி நகைகளை அடைவு வைத்தல்

8. ஒருவன் வட்டிக்குப் பணத்தைக் கடன் கொடுத்துப் பொன் வெள்ளியினாலே செய்யப்பட்ட ஆபரணாதிகளை அடைவாக வாங்கி வைத்திருக்கும் போது அடைவு பிடித்தவன் தான் தானே அதை அணிந்தானென்று அல்லது மறுபேர் அணியும்படி இரவல் கொடுத்தானென்று, அடைவு வைத்தவன் ஒப்பனை பண்ணக்கூடியதாய் இருந்தால், அடைவு பிடித்தவன் தான் கொடுத்த பணத்துக்கு உண்டான வட்டியை இழந்து போவான். தான் கொடுத்த பணத்தை வட்டியில்லாமற் பற்றிக்கொண்டு அவ் அடைவுகளை உடையவனுக்குத் திரும்பக் கொடுத்து விடவேண்டியது.

## அதிகாரம்-6

### கூலிக்குப் பிடித்தல்

### மிருகங்களைக் கூலிக்குப் பிடித்தல்

1. யாதொருவன் தன்னுடைய காணியை உழுவதற்காக ஒன்றென்கிலும் அதிகமென்கிலும் எருத்துமாடுகளைக் கூலிக்குப் பிடித்ததேயுண்டானால், உழுகிற சமயங்களிலே அந்த எருத்து மாடுகள் நையலாய்க் கிடைப்பட்டுப்போனாலும் செத்துவிட்டாலும் உடையவனாய் இருக்கிறவன் அந்த எருதுகளுக்குப் பதிலாக மறு எருதுகள் கூலிக்குப் பிடித்தவனுக்குக் கொடுக்கவேண்டியதில்லை. ஒருவன் தன்னுடைய எருதுகளை இரவலாக மறு பேருடைய பணிவிடைக்கு மனம் பொருந்திக் கொடுத்ததேயுண்டானால் அதுகளுக்குக் கால் முறிந்து போனாலும் அதுகள் செத்துவிட்டாலும் அந்த உடையவன், மாடு இரவலாக வாங்கினவனிடத்தில் தேசவழமைப்படிக்கு அதுகளுக்கு உத்தரவாதம் பண்ணும்படிகேட்கப்படாது. கை பிழைபாடு வந்து சம்பவித்ததென்று மனம் பொறுத்துக்கொள்ளவேண்டியது.

## அதிகாரம் 7

### கொள்வனவு விற்பனவு

### காணியின் விற்பனவு

1. முற்காலங்களிலே ஒருவன தன்னுடைய காணி தோட்டம் சிறை முதலானவைகளைத் தன்னுடைய உரிமைக்காரருக்கு அல்லது உடன் பங்காளருக்கு அல்லது அயற்காணிக்காரருக்கு அல்லது (ஒற்றிவைத்திருந்தால்) ஒற்றிக்காரருக்கு முன்னேற அறிவியாமற் பிறனொருவனுக்கு விற்றுப்போட்டால் அந்த உரிமைக்காரரும் உடன் பங்காளரும் அயற்காணிக்காரரும் ஒற்றிக்காரரும் தாங்கள் தானே கொள்வனவுக்காரராகிறதற்கு விசேஷமான வழக்குச் சொல்ல உரித்துண்டு. மேற்சொல்லப்பட்ட பேர்களுக்கு அறியப்பண்ணும் முறை எப்படியெனில் அந்தக்குறிச்சியில் அவர்களிருந்தால், ஒரு மாதத்திற்கு முன்னும் குறிச்சியிலிராமல் அந்தப்பற்றுக்குள்ளே இருந்தால், மூன்று மாதத்திற்கு முன்னும், மறு பற்றிலே இருந்தால், ஆறு மாதத்திற்கு முன்னும் பிற தேசத்திலே இருந்தால் ஒரு வருஷத்திற்கு முன்னும் அறிவிக்கவேண்டியது. அப்படி அறிவித்ததன் பேரால் முன்குறித்த அவதிக்குள் அவர்கள் யாதொரு முயற்சியும் பண்ணாதிருந்தால், விற்பனவு பெலப்புள்ளதாக எண்ணப்படும். பழையவராயிருந்து காலஞ்சென்று போன கனம்பொருந்திய பிளம் என்னும் கொம்மாந்தோர் பண்ணிய கட்டளையினால் இவ்வித விற்பனவு மிகவும் மாறுதலடைந்தது. அந்தக்கட்டளையிற் பிறகு காணியை விற்கமுன், காணியை விற்கிற பேர்கள் இருக்கிற தலத்திற்குச் சேர்ந்த கோவில்களிலே மூன்று ஞாயிற்றுக்கிழமைகளில் தொடர்ச்சியாகக்கூறி விற்பனவு பிரசித்தம் பண்ணப்பட்டதன் பின்பல்லாமல் விற்பனவுக் கடுத்த அறுதிஉறுதி நறுக்குச்சீட்டுக்கள் எழுதப்படாது. பழைய வழமையின் படி அந்தக் காணியைக் கொள்ளுகிறதற்கு முதலுரித்துத் தங்களுக்குஉண்டென்று நினைக்கிறவர் இந்த மூன்று கிழமை அவதிக்குள்ளாக வந்து வெளிப்பட்டுத் தங்கள் உரிமை இப்படிப் பட்டதென்று அறிவிக்கவேண்டியது. அந்த நியாயத்தைக்கொண்டு அப்போ அவர்கள் காணியைக்கொள்வார்கள்.

இந்த ஊரிற் குடியானவர்களுக்குள்ளாக இன்னுமொரு வழமை நடந்துவருகின்றது. அதாவது, முன்னொருவனுக்கு ஒற்றி வைத்திருக்கப்பட்ட காணியை வேறொருவனுக்குக் கட்டளைப்பிரகாரம் விற்பார்கள். இப்படி விற்குமிடத்துக் கொள்விலைப்பணத்தை முழுதுங் கொடுத்துத் தீர்க்கிறதற்கு அறுதிகொள்ளுகிறவனுக்கு அச்சமயத்தில் வகையில்லாதிருந்தாலும் ஒற்றிப்பணத்திற்கு மேற்பட்ட தொகையை மாத்திரம் காணி விற்றவனுக்குக் கொடுத்து விடுவானாகில், அந்தக் கொள்விலையை உறுதிப்படுத்தும்படிக்கு மேற்சொல்லிய கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் முறைமையான அறுதிஉறுதி பண்ணிக்கொடுக்கப்படும். காணி கொண்டவன் தான் பணங்கொடுத்து மீளுமளவும் ஒற்றிக்காரன் தானே காணியை ஆட்சி பெறும்படி விடுவான். அப்படியும் மீளுகிறதற்குச் சில முறை எட்டு ஒன்பது பத்து வருஷத்திற்கு மேலாகவும் செல்லும். அது கொண்டு அநேக வாக்குவாதம் சண்டை முதலான பிசகுக்ளும் வந்து சம்பவிக்கும். ஆகையால் நான் கண்ட மட்டுக்கும் அநேக புத்திமான்க்ளுடைய நீதிப்படிக்கும் சொல்வதென்னவெனில், அந்த அறுதி உறுதி எழுதுவிக்கமுதலே அவர்கள் பொருத்தம் பண்ணிக்கொண்ட கொள்விலைப்பணம் வட்டறக்கொடுத்துத் தீர்த்து விலகுதல் பண்ணிவிடவென்கிலும் அல்லது முன்சொல்லியபடி நடக்கவேண்டிய சமயத்தில் காணியுடையவன் முன் எழுதிக்கொடுத்த உறுதியைத் தள்ளி அறுதி கொண்டவன் ஒற்றிக்காரனுக்குப் புதிதாக ஒரு ஒற்றி உறுதியைக் எழுதிக் கொடுக்கவென்கிலும் கட்டளைபண்ணினால் நல்லதுபோலே கண்டேன்.

(தொடரும்)

# சுவாசநோய் அதிகரிப்புக்கு வாகனப் புகையே காரணம்

## ஆய்வுகள் மூலம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

இலங்கையில் அண்மைக்காலமாக அதிகரித்துள்ள சுவாசத் தொகுதி சம்பந்தப்பட்ட நோய்களுக்கு இங்கு பாவனையில் உள்ள வாகனங்களின் புகையே காரணம் என அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இலங்கையில் அண்மைக்காலமாக சுவாசத்தொகுதி சம்பந்தப்பட்ட நோய்கள், ஆஸ்துமா, புற்றுநோய் மற்றும் இருதய நோய்கள் உட்பட்ட மற்றும் பல நோய்களின் தாக்கம் அதிகரித்து வருகின்றமை அவ்தானிக்கப்பட்டுள்ளது.

மேறபடி நோய் ஏற்படுவதற்கு பெரும்பான்மையான காரணம் வாகனப் புகையில் இருக்கும் இரசாயனப் பதார்த்தங்கள் என்பதுடன், புகையிலை சிகரெட் போன்றவற்றைப் புகைப்பதால் சல்படைக்சைட் என்ற இரசாயனப் பதார்த்தம் உட்செல்வதுமேயாகும் என ஆய்வுகள மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, வாகனங்களின் புழக்கம் அதிகரித்த பகுதிகளில் இச் சுவாச நோய்களின் தாக்கம் உயர்வடைந்துள்ளதாக ஆய்வு முடிவுகள் மூலம் தெரியவந்துள்ளது என வழிமண்டல வள முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (தி-18)

# வைத்தியர் பற்றாக்குறை

(திருநெல்வேலி)

தருமபுரம் வைத்தியசாலையில் நீண்டகாலமாக வைத்தியர் பற்றாக்குறை நிலவிவருகிறது.

இவ் வைத்தியசாலைக்கு கடந்த 1960ஆம் ஆண்டு காலப் பகுதியில் வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

ஆனால், இப்போது மனிதநேய அமைப்புக்களின் நிதியுதவியுடன் இரு விடுதிகள் கட்டப்பட்ட நிலையிலும், வெளிநோயாளர்கள் அதிகரித்த போதிலும்கூட இவ் வைத்தியசாலைக்கு வைத்தியர்களை நியமிக்காது அரசு பாராமுகமாக இருந்து வருகிறது.

இதனால இப் பிரதேச நோயாளர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி வருவதாகத் தெரியவருகிறது. (தி-43)

# நாகர் கோவில் மக்களின் அவலவாழ்வு தொடர்கிறது

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த சுமார் 350 குடும்பங்கள் எதுவித அடிப்படை வசதியுமின்றி அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் இவ்விடங்களை விட்டு இடம்பெயாந்த மக்கள் பருத்தித்துறை தும்பளைப் பகுதியிலும், இலட்சுமணன் தோட்டப் பகுதியிலும், குடத்தனையிலும் உள்ள அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

தமது சொந்த இடங்களில் தம்மை மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி இப்பகுதி மக்கள் பல தடவை கோரிக்கை விடுத்தபோதிலும், இவர்களின் கோரிக்கையை சம்பந்தப்பட்டவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் இப்பகுதி மக்களின் அவல வாழ்வு இன்னும் தொடர்கிறது. (தி-43)



யா/வயாவிளான் மத்திய மகாவித்தியாலய உயர்தர மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வில், விருந்தினராகக் கலந்து கொண்ட உரும்பிராய் இந்துக்கல்லூரி அதிபர் இ.ஈஸ் வரநாதன், கா.சந்திரபாலன், பழைய மாணவர் சங்கத் தலைவர் வ.சத்தியசீலன் மற்றும் ஜெ.லட்சுமன் ஆகியோர் பாடசாலை சமூகத்தினரால் வரவேற்று அழைத்துச் செல்லப்படுகின்றனர்.



கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய கால்கோள் விழாவில், விருந்தினர்களாகக் கலந்துகொண்டு மங்கள விளககேற்றி வைக்கும் கா.தம்பிராசா மற்றும் பழைய மாணவா பெ.குகநாதன் ஆகியோருடன் பாடசாலை அதிபர், ஆசிரியரையும் படத்தில் காணலாம். (படம்: தாவடிநிருபர்)

# எதிர் காலத்தில் மத்திய அரசுடன் ம.தி.மு.க. சேராது - வைகோ

(சென்னை)

இலங்கை தமிழர்களின் ஒரே பிரதிநிதி தமிழீழ விடுதலைப்



புலிகள் என்பதை உலகமே ஒத்துக்கொண்டு விடடதாக ம.தி.மு.கவின் பொதுச் செயலாளர் வை. கோபாலச்சாமி தெரிவித்துள்ளார்.

ம.தி.மு.கவின் பொதுக் குழுக் கூட்டம் நடைபெற்ற பின் செய்தியாளருடன் பேசும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் மக்களவைத் தேர்தலுக்குப்பின், மத்தியில் அமையும் எந்த அரசிலும் ம.தி.மு.க சேராது.

திராவிட இயக்கத்தின் தனித்தன்மையைக் கட்டிக்காத்திடுவதென்று பொதுக் குழுவில் தீர்மானிக்கப்பட்டிருந்ததாக செய்தியாளர்களிடம் கூறியமைக்கு, வர்த்தக ஆட்சியில் பங்கெடுத்தால் திராவிட இயக்க வளர்ச்சியில் கவனம் செலுத்த முடியாது.

மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் ம.தி.மு.க வேட்பாளர்கள் பட்டியல் எதிர்வரும் 19 ஆம் திகதி சென்னையில் நடைபெறவுள்ள பொதுக் கூட்டத்தில் அறிவிக்கப் படும்.

ம.தி.மு.கதலைமையிலான கூட்டணி வெற்றி பெற்றால் சோனியா காந்தியை பிரதமராக ஏற்போம்.

பொடாச் சட்டத்துக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் வாக்களித்தமைதான் நான் செய்த மிகப் பெரியதவறு என்றார்.

டெல்லி, மும்பை, கர்நாடகத் தில் தலா ஒரு தொகுதியை தங்களுக்கு ஒதுக்கவேண்டும் என பாரதீய ஜனதாக் கட்சிக்கு அண்ணா தி.மு.க கட்சிகள் நிபந்தனை விதித்துள்ளன, இவ்விரு கட்சிகளுக்கும் இடையிலான கூட்டணி உருவாவது தொடர்ந்து சிக்கல் நீடித்துவருகின்றது.

இவ்விரு கட்சியிலும் குழுக்களை அமைத்து தொகுதிப் பங்கீடு குறித்து தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தபோதும், இவ்விரு கட்சிகளுக்கும் இடையில் தொகுதிப் பங்கீடுகுறித்து இணக்கப்பாடு காணப்படவில்லை.

தேசிய அளவில் தமது கட்சியை விரிவாக்க இதைவிட நல்ல சந்தர்ப்பம் கிடைக்காது என்று கருதிய அண்ணா தி.மு.க தங்களுக்கு டில்லியில் ஒரு தொகுதியையும், மும்பையில் கராபி பகுதி அடங்கிய தொகுதியையும், கர்நாடகத்தில் கோலார் தங்கச் சுரங்கம் தொகுதியையும், தமக்கு ஒதுக்கவேண்டும் என புதிய நிபந்தனையை விதித்துள்ளது.

அண்ணா தி.மு.கவின் இக் கோரிக்கை பாரதிய ஜனதாக் கட்சிக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்ததுடன், இதுவே இவ்விரு கட்சிகளுக்கும் இடையிலான தொகுதிப் பங்கீடு குறித்த பேச்சுவார்த்தையில் இதுவரை இணக்கப் பாடு ஏற்படாது. இருப்பதற்கும் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பாண்டிச் சேரித் தொகுதியை மீண்டும் காங்கிரஸ் கட்சிக்கே வழங்குவது தொடர்பாக பாட்டாளி மக்கள் கட்சியுடன் தி.மு.க தலைவர் கருணாநிதி பேசத் திட்டமிட்டிருந்ததாகத் தெரிகிறது.

தி.மு.க தலைவர் கருணாநிதியை இருதினங்களுக்கு முன்சந்தித்து சோனியா காந்தி வைத்த கோரிக்கைகளின் படியே தி.மு.க இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

கருணாநிதியுடன் நடைபெற்ற சந்திப்பின் போது, இந்த விவகாரத்தைக் கிளப்பிய சோனியா காந்தி இதில் சமரசம் ஏற்படாவிட்டால், புதுவையில் காங்கிரஸ் கட்சி தனித்துப் போட்டியிடும் என கூறினார்.

இதனை அடுத்து காங்கிரஸ் கட்சிக்கு அமைக்கப்பட்ட சேலம், அல்லது மயிலாடுதுறையை பாட்டாளி மக்கள்கட்சிக்கு வழங்கவும், பாண்டிச் சேரியை காங்கிரஸ் கட்சிக்கு வழங்கவும், கருணாநிதி திட்டமிட்டுள்ளார்.

பாட்டாளி மக்கள் கட்சி இதற்கு சம்மதம் தெரிவிக்காது விட்டால், தம்வசம் உள்ள கடலூரை அக் கட்சிக்கு வழங்கிவிட்டு காங்கிரஸ் கட்சிகு பாண்டிச் சேரியை வழங்கி அக்கட்சியின் வசமுள்ள சேலம் மயிலாடுதுறையில் ஒன்றை தி.மு.கவுக்கு எடுக்கவும் கருணாநிதி திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகின்றது என்றார்.

(தி-9)

## ஈராக் வெளிநாட்டு அமைச்சர் மத்திய கிழக்கு விஜயம்

(பக்தாத்)

நல்லெண்ணப் பேச்சு வார்த்தைகளை மேற்கொள்ளும் பொருட்டு, ஈராக்கிய ஆளும் பேரவையின் வெளிநாட்டு அமைச்சர் மத்திய கிழகது நாடுகளுக்கு சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதிலும், பாதுகாப்பை நிலை நிறுத்துவதிலும் அண்டை நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டே, அவர் இந்தச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

சவுதியரேபியா, குவைத், சிரியா, துருக்கி, ஈரான் மற்றும் ப.்.ரேன் ஆகிய நாடுகளுடன் இவர் பேச்சு வார்த்தைகளை நடத்தவுள்ளார். (தி-09)



மத்திய சுற் றுலா மற் றும் கலாச்சார அமைச்சகம் ஏற் பாடு செய்துள்ள பௌத்த மற்றும் ஆன்மீக சுற்றுலா பற்றி டெல்லியில் செய்தியாளர்களிடம் விளக்கிக் கூறுகிறார் சுற்றுலா அமைச்சர் ஜக்மோகன் .

## ஜாக்ஷனின் விசாரணை ஏப்ரலில்

பிரபல அமெரிக்க பொப்பிசைப் பாடகர் மைக்கல் ஜக்ஷன் மீதான சிறுவர் துஷ்பிரயோக வழக்கு விசாரணைகள் எதிர்வரும் எப்ரல் மாதம் அளவில் ஆரம்பிக்கப்படுமென அமெரிக்க நீதிமன்றம் அறிவித்துள்ளது.

துஷ்பிரயோகத்துக்கு உள்ளானதாகக் கூறப்படும் சிறுவனை இந்த வருட இறுதிக்குள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சிறுவன் ஒருவனிடம் தகாத முறையில் நடந்துகொண்டதாகக் குற்றம் சாட்டபபட்டுள்ள மைக்கல் ஜக்ஷன் மீதான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் கல்போர்ணியாவின் சர்தமரியா நீதிமன்றத்தில் நடைபெற்றது. (தி-9)

WORLD NEWS உலக தரிசனம்

## நீச்சல் தடாகக் கூரை சரிந்து 11 பேர் பலி

### மொஸ்கோவில் சம்பவம்

(மொஸ்கோ)

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் உள்ள நீச்சல் தடாகம் ஒன்றின் கூரை சரிந்து விழுந்ததால், 11 பேர் உயிரிழந்துள்ளதுடன் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

கண்ணாடியிலான நீச்சல் தடாகத்தின் கூரை பனிக்கட்டிகளின் அதிக பாரத்தினால் இடிந்து விழுந்திருக்கலாம் என்று தெரிவிக்கப் படுகின்றது.

சம்பவம் இடம்பெறும் போது சிறுவர்கள், பெண்கள் உட்பட சுமார் 400 க்கும் மேற்பட்டோர் இந்தத் தடாகத்தில் இருந்தனர்.

இந்தச் சம்பவத்துக்கும் பயங்கரவாதத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் கூறப்படுகின்றது.

உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று ரஷ்யப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (தி-9)

## தமிழக மக்களின் நலிவுதீர தி.மு.க - காங். கூட்டணிக்கு வாக்களியுங்கள் - சோனியா

(சென்னை)

மத்தியில் காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைத்தால் இருமாநில விவசாயிகள் நலனுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் காவிரிப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று அக் கட்சியின் அகில இந்திய தலைவி சோனியா காந்தி உறுதியளித்தார்.

சென்னை காமராஜர் அரங்கம் நுழை வாயிலில் அமைக்கப்பட்டுள்ள காமராஜர் சிலையை நேற்று முன்தினம் திறந்து வைத்துப் பேசுகையில் நாட்டின் நெற்களஞ்சியமான தமிழகத்தின் காவிரிப் பாசனப் பகுதி தற்போது பாலைவனமாகக காட்சியளிக்கின்றது என்றும், அதற்குக் காரணம் பிரதமர் வாஜ்பாயதான் என்றும் அவர் தெரிவித்தார்.

காவிரி ஆணையத்துக்குத் தலைமை தாங்கும் வாஜ்பாய் இப் பரசசினைககுத தாவு காணத தவறிவிட்டார். தேர்தலுக்குப் பின் மத்தியில் காங்கிரஸ் ஆட்சியமைத்தால் இரு மாநில விவசாயிகளின் நலனையும் பாதுகாக்கும் வகையில் இப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப் படும் என்றார்.

தமிழ்நாடு விவசாயிகள் நிறைந்த மாநிலம். ஆனால் இங்குள்ள விவசாயத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நெல், கரும்பு உற்பத்தியாளர்களுக்கு கட்டுபடியான விலை கிடைக்கவில்லை. விவசாயிகளுக்கு ஒரு மூட்டை நெல்லுக்கு உற்பத்திச் செலவைவிட 50 ரூபா குறைவாகவே கிடைக்கின்றது. கூட்டுறவுக் கரும்பு ஆலைகளும் மோசமான நிலையிலேயே இருக்கின்றன. கூட்டுறவு ஆலைகள ஒனறன பின் ஒன்றாக மூடப்பட்டுக் கொண்டே வருகிறது என்று அவர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் தேயிலை, கோப்பித் தோட்டத் தொழிலாளர்களும் தேங்காய் உற்பத்தியாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், காங்கிரஸ் அரசு ஆட்சிக்கு வந்தால் இப் பிரச்சினைகளையெல்லாம் தீர்க்க நடவடிக்கை எடுக்கும் என்றும் கூறினார்.

(து)

## சதாம் ஹு சேனை பார்வையிட அமெரிக்கா அனுமதி

(வாஷிங்டன்)

தற்போது சிறை வைக்கப்பட்டுள்ள முன்னாள் ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசேனைப் பார்த்து வருவதற்கு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அமெரிக்கா அனுமதி வழங்கியுள்ளது.

ஆனால், இந்த சந்திப்பு எப்போது நடக்கும் என்பது பற்றி இன்னும் தெரிய வரவில்லை.கடந்த டிசம்பர் மாதம் ஈராக்கில் இருக்கின்ற அமெரிக்கப் படைகள் சதாம் ஹுசேனைப் பிடித்தன. அவர் ஒரு போர்க் கைதியென்று அமெரிக்கா சென்ற மாதம் முறைப்படி ஒப்புக் கொண்டது. இதன் காரணமாக செஞ்சிலுவைச் சங்கம் அவரைப் சந்திப்பதற்கான உரிமையை அமெரிக்கா வழங்கியுள்ளது.

(தி-9)

## வெனிசுவேலா ஜனாதிபதிக்கு எதிராக கராகஸ்ஸில் ஆர்ப்பாட்டம

(கராகஸ்)

வெனிசுவேலாவின் ஜனாதிபதி ஹுயுகோ சாவேஸுக்கு எதிராக கராகஸ் நகரில் நேற்றுமுன் தினம் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

சாவேஸுக்கு எதிராக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துமாறு கோரியே ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

தேர்தல் ஒன்றை நடத்துமாறும், வெனிசுவேலா அதிபரை எதிர்த்தும் ஆயிரக் கணக்காணோரின் கையொப்பங்கள், பதாதைகள், கொடிகள் மற்றும் கோஷங்களை எழுப்பியவாறு தேசிய தேர்தல் பேரவையிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேசிய தேர்தல் பேரவையில் நம்பிக்கை இல்லை. போராட்டமே சிறந்த வழி. இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அந்த நாட்டின் பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர் கோஷமிட்டனர்.

எனினும், ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடத்தவேண்டுமாயின் அதற்கு ஆதரவாக 2.4 மில்லியன் கையொப்பங்கள் தேவை.

இம் மாதம் 29 ஆம் திகதி அது குறித்து அறிவிக்கப்படும் என தேசியத் தேர்தல் பேரவை அறிவித்துள்ளது.

வெனிசுவேலா உலக எண்ணெய் ஏற்றுமதியில் 5 ஆம் இடத்தை வகிக்கின்றமை இங்கு குறிப்பிடத் தக்கது. (தி-9)



# சிங்கள மக்களின் அறியாமையே இனப்பிரச்சினைக்குக் காரணம்

## சமாதானப் பேரவை உறுப்பினர் பாலகிருஷ்ணன் தெரிவிப்பு

(கொழும்பு)

**முற்காலத்தில் இலங்கையில் தமிழ்மக்கள் மிகக்குறைவாக இருந்தமையினால் சிங்களச் சமூகம் அவர்களுடன் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தது. பின்னர் படிப்படியாக தமிழ்மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியதும், இலங்கையில் பங்குபோட தமிழர்களும் வந்துவிடுவார்களோ என்ற அச்சம் பெரும்பான்மை இன மக்கள் மத்தியில் வந்துவிட்டது.**

இதனால் தமிழ்மக்களை அடிமைப்படுத்தி அவர்களின் உரிமைகளை படிப்படியாக நசுக்க பெரும்பான்மையினர் முற்பட்டபோது, இதனைத் தெரிவித்த தமிழர்கள் தமது உரிமைகளுக்காக சிங்கள மக்களுடன் எதிர்த்து போராட ஆரம்பித்தார்கள். அது முதலில் வன்முறைகளாக தோற்றம் பெற்ற பின்னர், போராட்டமாக மாறியது. இதனை நாம் இனப்பிரச்சினை என்று கூறிவருகின்றோம் என தேசிய சமாதானப் பேரவையைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்பட்டு வரும் 'வீடியும்வேளை' நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

உண்மையிலேயே தமிழ் மக்களும் இலங்கையில் தொன்று தொட்டு வாழ்ந்துவரும் ஒரு இனம். அதேபோன்று சிங்கள மக்களும் தொன்றுதொட்டு வாழ்ந்து வருகின்றார்கள்.

தமிழ் மக்களுக்கும் இந்நாட்டில் சகல உரிமைகளும் இருக்கின்றது. அவர்களும் இந்நாட்டுப் பிரஜைகள் தான். ஆனால், அதனை பெரும்பான்மையின மக்கள் இன்றுவரை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார்கள்.

தமிழர்களை சிறுபான்மை இனத்தவர்கள் எனக்கூறி ஒதுக்கி விடுகின்றார்கள். இவர்களின் இச்செயற்பாட்டிற்கு ஆதரவாக ஆட்சியில் வரும் அரசியல்வாதிகளும் குறிப்பாக சிங்கள அரசியல்வாதிகளும் செயற்பட்டார்கள்.

அத்துடன், மொழியைப் பயன்படுத்துவதிலும் இங்கு பெரும் சிக்கல் ஏற்பட்டது. பெரும்பான்மையினத் தலைவர்களே ஆட்சியில் இருந்துவந்தார்கள். தற்போதும் இருந்து வருகின்றார்கள். இதனால் அவர்கள் சிங்கள மொழியை அரச மொழியாகப் பயன்படுத்தினார்கள். இதனால் தமிழ்மக்கள் பெரும் இன்னல்களை எதிர்நோக்கினார்கள். தமது தேவைகளை அரசிடம் எடுத்துக்கூற முடியாதிருந்தார்கள்.

இந்தப் பிரச்சினை தற்போதும் இருந்து வருகிறது.

இத்தகைய இனப்பிரச்சினைகள் இலங்கையில் மட்டுமல்ல பல நாடுகளில் இருந்து வருகின்றது.

இனப்பிரச்சினைக்கு அடித்தளம் இடுகின்ற இனமதம் தொழிப் பிரச்சினைகள் பல நாடுகளில் இன்றும் காணப்படுகின்றன. இந்தியாவில் மத முரண்பாடு அதிகம் காணப்படுகின்றது. இந்துக்களுக்கும் இஸ்லாமியருக்கும் இடையே அது தோற்றம் பெற்றிருக்கின்றது.

அதேபோன்று தென்னாபிரிக்காவில் இன முரணபாடும், இந்தோநேசியாவில் மத முரண்பாடும் தோற்றம்பெற்றிருக்கின்றன.

இவ்வாறு பல நாடுகளில் இத்தகைய இன, மத மொழிப் பிரச்சினைகள் உருவாகியிருக்கின்றன.

சமூகங்களுக்கு இடையிலான உறவுகளைச் சீர்குலைக்கும் இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவே ஐக்கியநாடுகள் சபை சமாதானக் குழுவொன்றை நியமித்துள்ளது.

ஆனாலும், அச்சமாதானக் குழுவினால் இத்தகைய இன மத மொழிப் பிரச்சினைகளுக்கு முழுமையாகத் தீர்வுகாண முடியாதிருக்கின்றது. காரணம் உள்நாட்டில் அதாவது ஒரேநாட்டில் வாழும் இரு சமூகங்களுக்குமிடையேதான் இத்தகைய இன மத மொழிப் பிரச்சினைகள் எழுந்திருக்கின்றன.

இலங்கையைப் பொறுத்தவரையில் இலங்கையில் வாழும் இரு சமூகங்களிடையே பிரச்சினை எழுந்திருக்கின்றன.

இத்தகைய பிரச்சினையைத் தீர்க்கும் பொறுப்பு அரசிற்கே இருக்கின்றது. இதனால் ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானக் குழு இது விடயத்தில் உடனடியாகத் தலையிடமுடியாதிருக்கின்றது.

இதேவேளை, இத்தகைய இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டுமானால், இலங்கையில் உள்ள இனங்களுக்கு இடையே ஒற்றுமையை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

அந்தப் பொறுப்பு அரசிடமே இருக்கின்றது. அரசு மக்களை வேறுபடுத்திக் காட்டக்கூடாது. அவர்களின் தேவைகளை நிறைவு செய்யவேண்டும்.

அத்துடன், பாடசாலைகளில் இன ஒற்றுமை குறித்து மாணவர்களிற்கு போதிய விளக்கம் கொடுத்து, அதன் அவசியத்தை வலியுறுத்தவேண்டும்.

சிறு வயதில் இருந்தே அவர்களிடம் இன ஒற்றுமையை ஏற்படுத்தினால், எதிர்காலத்தில் இத்தகைய பிரச்சினைகள் இலங்கையில் ஏற்படாது என்றார்.

(தி-60,10)

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு மக்கள் மத்தியில் பலத்த ஆதரவு

## இருகட்சிகளும் குதூகல நிலையில்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு தொழிற்சங்கங்கள் மற்றும் பொது அமைப்புக்கள், புத்திஜீவிகள், சமயத் தலைவர் கள் ஆகியோரின் நல்லாசிகள் தொடர்ந்து கிடைத்துவருவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் ஜே.வி.பியினரும் தெரிவித்துள்ளனர்.

இடதுசாரிகளும் முற்போக்கு சக்திகளும் ஏற்கனவே முன்னணிக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாகக் குறிப்பிடும் இவ் இரு கட்சியினரும், தமது முன்னணிக்கு ஏற்கனவே சர்வதேச ஒத்துழைப்பு கிடைத்திருப்பதாகவும் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

அத்துடன், இம்முன்னணியில் பல இடதுசாரிக் கட்சிகள் கூட்டுச் சேர்ந்துள்ளன, இன்னும் சேரவுள்ளன.

இடதுசாரிக் கட்சிகள் கூட்டுச் சேர்வதன் மூலம் இக்கட்சிக்கு மக்களின் மத்தியில் உள்ள ஆதரவு பெருகிவருகின்றது.

இநநிலையில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி அதிகப்படியான வாக்குகளைப் பெற்று ஆட்சிப் பீடம் ஏறும் எனவும் இரு கட்சிகளும் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

(தி-60,10)

# ஜனாதிபதியின் நடவடிக்கைகளால் வறிய மக்களே கூடுதலாக பாதிப்பு

## பௌத்தமத பீடாதிபதிகள் கவலை தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நடவடிக்கைகளினால் பொருளாதாரம் பாதிப்படைந்து, வறிய மக்களே பெரும் துன்பச் சுமைகளைத் தாங்குவதாக பௌத்தமத பீடாதிபதிகள் இலங்கைக்கான இந்தியத் தூதுவரிடம் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

கண்டி மல்வத்த பீடம் மற்றும் அஸ்கிரிய பீடம் ஆகியவற்றில் இடம்பெற்ற, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபம்சென்னுடனான சந்திப்பின்போதே, பௌத்தமத பீடாதிபதிகள் தமது கவலையை வெளிப்படுத்தியுள்ளனர்.

கடந்த சில மாதங்களாக ஜனாதிபதி எடுத்துவரும் நடவடிக்கைகள் எவ்வகையிலும் பொருத்தமற்றவை என்று இந்தியத் தூதுவரிடம் தெரிவித்துள்ள மல்வத்த பீடாதிபதி ரம்புக்வெல்ல சிறீவிபஸ்சி தேரர், இலங்கை மக்கள் நிரந்தர சமாதானம் ஏற்படும் நாளையே மிகவும் எதிர்பார்த்துக் காத்திருப்பதாகக் கூறியுள்ளார்.

இதேவேளை, தற்போதைய தென்னிலங்கையின் அரசியல் நிலைமைகள் குறித்துக் கருத்து எதுவும் கூற மறுத்துவிட்ட அஸ்கிரிய பீடாதிபதி உடுகம புத்திரகித்த தேரர், இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டிருந்தால் நல்லதொரு உடன்பாட்டினை எட்டியிருக்கலாம் என இந்தியத் தூதுவர் நிருபம் சென்னிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உளநாட்டு விவகாரங்களில் இந்திய அரசு எவ்வகையிலும் தலையிடாது என இதற்குப் பதிலளித்துப் பேசிய இந்தியத் தூதுவர், இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும் என்பதையே தாமும் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.(தி-18)


### யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

**பொதுச்சபை அங்கத்தவர்களின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் 2004 ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபைத் தெரிவும் (07.03.2004)**

சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் 07.03.2004ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு சங்கத் தலைவர் திரு. இ. பேரின்பநாயகம் தலைமையில் சங்கத் தலைமைச் செயலகத்தில் (559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் ) நடைபெறவிருக்கின்றதென்பதை தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உபவிதி 26 இல் 7வதின் பிரகாரம் மேற்படி வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஏதாவது பிரேரணையை பிரேரிக்க விரும்பின் அப்பிரேரணைப் பிரதி ஒன்றை 25.02.2004க்கு முன்னர் சங்கச் செயலாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

மேற்படி திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் பிரேரணைகள் நிகழ்ச்சிநிரலில் இடம்பெறமாட்டாது என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இ. பேரின்பநாயம்
மாவட்ட தலைவர்.

விலாசம்:-
559, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

கு. காந்தரட்ணம்
மாவட்ட செயலாளர்.

(C/7272)


# விமல் வீரவன்சவுக்கு 10 இலட்சம் நஷ்டஈடு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்சவுக்கு நஷ்டஈடாகவும் சட்டரீதியாக ஏற்பட்ட செலவீனமாகவும் 10இலட்சம் ரூபாவை அசோக செய்தி நிறுவனம் வழங்கியுள்ளது.

தினமின பத்திரிகையில் விமல் வீரவன்சவைப்பற்றிக் கீழ்த்தரமான முறையில் செய்தி வெளியிட்டிருந்ததாகக் கூறி அதனை அச்சிடும் நிறுவனமான அசோக நியூஸ்பேப்பர் நிறுவனத்திற்கு எதிராக விமல் வீரவன்ச கொழும்பு நீதிமன்றில் வழக்கு ஒன்றைத் தாக்கல்செய்திருந்தார்.

இதனையடுத்து மேற்படி நிறுவனம் விமல் வீரவன்சவுக்கு சட்டரீதியாக ஏற்பட்ட செலவுக்காகவும், நஷ்டஈடாக 10 இலட்சம் ரூபாவை வழங்கவேண்டும் என கொழும்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (தி-60,10)

# நேர நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியில் புதிதாகத் திறந்துவைக்கப்பட்ட நூலகம் மாணவர்களின் நலன் கருதி இன்று திங்கட்கிழமை முதல் மாலை 5.00 மணிவரை திறந்துவைக்கப்பட்டிருக்கும்.(தி-96)

# மலசலகூட உதவிகோரி மூவிமெண்டோவுக்குக் கடிதம்

(சுதுமலை)

மானிப்பாய்ப் பிரதேச சபையின கீழ் உள்ள பிரான்பற்றுக் கிராமத்திற்கு மலசலகூட உதவிகளின் அவசியம் குறித்து பிரதேச சபைச் செயலாளர் பி.விக்டர் மூவிமெண்டோ நிறுவனப் பணிபாளருக்கு அவசரக் கடிதம் ஒன்றைக் கடந்த வாரம் அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தில் பண்டத்தரிப்புப் பகுதியில் உள்ள பிரான்பற்றுக்கிராமம் யுத்தத்தினால் பாதிப்படைந்து தற்போது மீள்குடியேற்றம் இடம்பெற்று வருகிறது. இப்பகுதியில் சுமார் 416ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மலசலகூட வசதியற்று வாழ்ந்து வருகின்றனர்.

இப்பகுதியின் சுற்றுச்சூழல் பெரிதும் மாசுபடுவதாகவும் அப்பகுதிச் சுகாதார உத்தியோகத்தர்களுக்கும் பிரதேச சபைக்கும் அறிவிக்கப்பட்டது.

அத்துடன், மழைக்காலத்தில் குடல்சார் தொற்றுநோய்களும் அப்பகுதியில் கூடுதலாகக் காணப்படுகின்றது.

எனவே உரிய நடவடிக்கையை விரைவில் எடுப்பதற்கு ஆவன செய்யுமாறு அக்கடிதத்தில் பிரதேச சபைச் செயலாளர் சுட்டிக் காட்டியுள்ளார்.

(தி-252)

# கிரிக்கெற்றில் முடிசூடா மன்னர்களை எதிர்கொள்ளும் இலங்கை அணி

அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணி கிரிக்கெற் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இம் மாதம் 14ஆம் திகதி இலங்கைக்கு வந்துள்ளது.

அவுஸ்திரேலிய கிரிக்கெற்

## ஒருநாள் கிரிக்கெற் தொடர்

அணி இலங்கைக் கிரிக்கெற் அணியுடன். 5 ஒரு நாள் போட்டிகளிலும், 3 டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடவுள்ளது. கிரிக்கெற் உலகின் முடிசூடா மன்னர்களாகத் திகழும் அவுஸ்திரேலிய அணியினரே இன்று வரை ஒரு நாள் போட்டிகளிலும் டெஸ்ட் போட்டிகளிலும் சர்வதேச



தரவரிசைப் பட்டியலில் முன்நிலை வகிக்கின்றனர்.

அண்மையில் நடைபெற்ற இந்தியாவுடனான போட்டியில் தமது திறமைகள் மூலம் வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளனர். ஆனால இவர்கள் இலங்கைத் தொடரை எப்படித் தக்கவைப்பார்கள் என்பதை அறிவதில் கிரிக்கெற் ரசிகர்கள் ஆர்வத்தோடு இருக் கின்றனர். விறுவிறுப்பாக நடை பெறும் இந்த இரு அணிகளுக்கு மிடையிலான போட்டி எல்லோர் கவனத்தையும் ஈர்க்கும் என்பதில் ஐயமில்லை.

இதே நேரம் இலங்கை வரும் அவுஸ்திரேலிய அணி எதிர்வரும் 17ஆம் திகதி பயிற்சிப் போட்டியில் பங்கு பற்றவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள ஒருநாள் போட்டிகளுககாக இலங்கைக் கிரிக்கெற் சபை 25 பேர் கொண்ட அணியைத தெரிவு செய்துள்ளது. சுழல் பந்து வீச்சுக்கு சாதகமான இலங்கை மைதானங்களில் இலங்கைக் கிரிக்கெற் அணி சார்பாக ஐந்து சுழல் பந்து வீச்சாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சுழல் பந்து வீச்சை பொறுத்தவரை அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணிக்குப் பெரும் சிரமம் கொடுப்பவராக முத்தையா முரளிதரன் இருககின்றார். இலங்கையில் உள்ள ஆடுகளங்கள் முரளிதரனுக்கே சாதகமாக இருப்பதால் அவுஸ்திரேலியர்களை இது மேலும் கவலையடையச் செய்கின்றது.

**அவுஸ்திரேலியாவின் பிரபல சுழல் பந்து வீச்சாளர் ஷேன்வோர்னை**

இலங்கை அணியை சமாளிக்க அணியில் இணைத்துக்கொள்ள அவுஸ்திரேலியக் கிரிக்கெற் அணித் தலைவர் ரிக்கிபொண்டிங் விருப்பம தெரிவித்துள்ளார்.

இலங்கை - அவுஸ்திரேலிய ஒரு நாள் போட்டித் தொடர் இம் மாதம் 20 ஆம் திகதி ஆரம்பம் ஆகும். ஒரு நாள் போட்டிகள் தம் புள்ளையிலும், கொழும்பிலும் நடைபெறவுள்ளன. 5 ஒருநாள் போட்டிகளில் 3 போட்டிகள் பகல் இரவு போட்டிகளாக நடைபெற வுள்ளன.

ஒருநாள் போட்டிகளைப் பொறுத்தவரை கடைசியாக 2002ஆம் ஆண்டு மினி உலகக் கிண்ணக் கிரிக்கெற போட்டியில் அவுஸ்திரேலிய அணியை இலங்கை அணி அரைஇறுதிப் போட்டியில் வெற்றி பெற்றிருந்தது. இதுவே இலங்கையில் நடைபெற்ற இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுககிடையிலான கடைசிப் போட்டியாகும். அதன் பின்னர் இந்த ஆண்டு இரு அணிகளுக்கிடையில் கிரிக்கெற் போட்டி நடைபெறவுள்ளது.

இதுவரை இரு அணிகளுக் கிடையில் 50 ஒருநாள் சர்வதே சப் போட்டிகள் நடைபெற்றிருக் கின்றன. இவற்றில் 33 போட்டிகளில் அவுஸ்திரேலிய அணியும், 15 போட்டிகளில இலங்கை அணியும் வெற்றிபெற்றுள்ளன. இரு போட்டிகள் முடிவற்ற நிலையில் கைவிடப்பட்டுள்ளன.

இந்த 50 போட்டிகளில் 29 போட்டிகள் அவுஸ்திரேலியாவி லும், 14 போட்டிகள் இலங்கையிலும் நடைபெற்றுள்ளன. 7 போட்டிகள் நடு நிலையான மைதானங்களில் நடைபெற்றது.

அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற 29 போட்டிகளில், 24 போட்டிகளில அவுஸ்திரேலியா வெற்றி பெற்றுள்ளது. இதில் 5 போட்டிகளில் மாத்திரமே இலங்கை வெற்றி பெற்றுள்ளது.

அதேவேளை, இலங்கையில் நடைபெற்ற 14 ஒருநாள் போட்டிகளில், 9 போட்டிகளில் இலங்கை அணி வெற்றிபெற்றுள்ளது. 3 போட்டிகளில் மாத்திரமே அவுஸ் திரேலிய அணி வெற்றிபெற்றது. 2 போட்டிகள முடிவற்ற நிலையில் முடிவுற்றுள்ளன.

நடுநிலையான மைதானங்களில் நடைபெற்ற 7 போட்டிகளில் அவுஸ



திரேலிய அணி 6 போட்டிகளிலும் இலங்கை ஒரு போட்டியிலும் வெற்றி பெற்றன. இலங்கை பெற்ற இந்த ஒரு வெற்றியானது, 1996 ஆம் ஆண்டு பாகிஸ்தானின் லாகூரில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியிலேயே கிடைத் திருந்தது. இவ்விரு அணிகளுக் கும் இடையில் நடைபெற்ற போட்டிகளில் முக்கிய விடயங்கள்.

**இலங்கை -அவுஸ்திரேலிய போட்டிகளின் அதிகூடுதலான ஓட்டங்கள்**

**அவுஸ்திரேலியஅணி** -3விக்கட் இழப்பிற்கு 332 ஓட்டங்கள் (1989/90 காலப்பகுதியில் சார்ஜாவில் இடம்பெற்ற அவுஸ்ட்-ஏசியா போட்டியில் பெறப்பட்டது.

**இலங்கை அணி** - 5விக்கெற் இழப்பிற்கு 343 ஓட்டங்கள். (2002 /2003 காலப்பகுதியில் அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற வி.பி. முக்கோணத்தொடரில் பெறப்பட்டது.

**இலங்கை - அவுஸ்திரேலிய போட்டிகளின் அதிகுறைந்த ஓட்டங்கள்**

**அவுஸ்திரேலிய அணி** - 163 ஓட்டங்கள். (2002 ஆம் ஆண்டு இலங்கையில் ஆர்.பிறேமதாச மைதானத்தில் மினி உலகக் கிண்ணப்போட்டியின் அரையிறுதிப் போட்டியில் பெறப்பட்டது)

**இலங்கை அணி** - 91 ஓட்டங்கள் (1984/85 காலப்பகுதியில் அவுஸ்திரேலியாவில் உள்ள அடிலைட் மைதானத்தில் இடம்பெற்ற பென்சன் அன்ட் ஹெட்ஜஸ் போட்டித் தொடரில் பெறப்பட்டது)

**இரு அணிகளுக்கிடையிலான போட்டியில் சிறந்த இணைப்பாட்டம்**

**அவுஸ்திரேலிய அணி** - 224 ஓட்டம். (1984/85 காலப்பகுதியில் டீன் ஜோன்ஸ் அலன் போர்டர் ஆகிய இருவரினாலும் இரண்டாவது விக்கெற்றுக்காகப் பெறப்பட்ட ஓட்டமாகும்)

**இலங்கை அணி** - 237 ஓட்டங்கள். (2002/2003 காலப்பகுதியில் வி.பி முக்கோணத் தொடரில் சனத் ஜயசூரிய, மாவன் அத்தபத்து ஆகிய இருவராலும் முதலாவது விக்கெற்றுக்காகப் பெறப்பட்ட ஓட்டம்)

**இரு அணிகளுக்குமிடையிலான போட்டியில் ஒருவர் பெற்ற கூடுதலான ஓட்டம் (சதங்கள்)**

**அவுஸ்திரேலிய அணி** -

அடம்ஸ் கில் கிறிஸ்ற் 154 ஓட்டம்.
அடம்ஸ் கில் கிறிஸ்ற 131 ஓட்டம.
மார்க் லோர் 130 ஓட்டம்

**இலங்கை அணி** -

சனத் ஜயசூரிய 122 ஓட்டம்
அரவிந்த டி சில்வா - 107 ஓட்டம்.
அரவிந்த டி சில்வா - 105 ஓட்டம்.

**இரு அணிகளுக்குமிடையிலான போட்டியில் சிறந்த பந்து வீச்சு**

**அவுஸ்திரேலிய அணி** - பொடமைட் பேர்த மைதானத்தில் 1987/88 காலபகுதியில் 33 ஓட்டங் களுக்கு 5 விககெற்.

**இலங்கை அணி** - சனத் ஜயசூரிய 1999 ஆம் ஆண்டு காலப்பகுதி யில காலி மைதானத்தில் 28 ஓட்டங்களுக்கு 5 விக்கெற்.

**இரு அணிகளுக்கிடையிலான போட்டியில் தனிநபர் பெற்ற கூடுதலான ஓட்டங்கள்**

**அவுஸ்திரேலிய** - மார்க்லோ -23 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் பங்குபற்றி 906 ஓட்டங்கள்.

**இலங்கை** - அரவித்த டி சில்வா 36 சர்வதேச ஒருநாள் போட்டிகளில 1451 ஓட்டங்கள்.

**இரு அணிகளுக்குமிடையிலான போட்டியில் பெறபட்ட சதங்கள்**

**அவுஸ்திரேலிய** - இவ் அணி சார்பில் 12 சதங்கள் பெறப்பட்டுள்ளன.

* ரிக்கிபொண்டிங் 3 சதங்கள் (113,114,106)
* அடம்ஸ் கில்கிறிஸ்ற் 2 சதங்கள் (154,131)
* மார்க்லோ (130)
* டேவிட் பூண் (122)
* டரன் லேமன் (119)



* அலன் போர்டர் (118*)
* டின்ஜோன்ஸ் (117*)
* ஸ்டீவ் லோ (102*)
* டர்னர் (101) ஆகிய 7 பேரும் தலா ஒவ்வொரு சதங்களைப் பெறறுள்ளனர்.

**இலங்கை** - இவ் அணி சார்பில் 4 சதங்கள் பெறப்பட்டுள்ளன.



* அரவிந்த டி சில்வா 2 சதங்கள் (107, 105)
* சனத் ஜயசூரிய (122)
* மாவன்அத்தபத்து (101)

***ஆட்டமிழக்காமல்**

இவ்விரு அணிகளுக்குமிடையிலான போட்டியில் கூடுதலான விக்கெற்றுக்கள்

**இலங்கை** - சமிந்தவாஸ் - 25 போட்டிகளில் 29 விக்கெற்றுக்கள்.

*கீ.நோயல் சர்வானந்தா*

**அவுஸ்திரேலிய** - கிளைன்ட் மக்ராத - 20 போட்டிகளில் 32 விக்கெற்றுக்கள்.

இந்த சாதனைகள் இந்த மாதம் 20 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் முறியடிக்கப்படுமா, இல்லையா? எனபது கிறிக்கெற ரசிகர்களின் கேள்வியோடு கூடிய எதிர்பார்ப்பாகும்.

# தேசிய விளையாட்டு விழாவில் தமிழ் விரோத சக்திகளுக்கு எரிச்சல்

## தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ தேசிய விளையாட்டு



விழா இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள தமிழ் விரோத சக்திகளுக்குப் பொறுக்க முடியாத விடயமாக அமைந்துள்ளதால் அவர்கள் தமிழ் மக்களின் எழுச்சியை சீகுலைக்கவும், இடையூறு செய்யவும் முனைகின்றனர் என தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில, தமிழர் தாயகத்தின் அனைத்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் விளையாட்டு வீரர்களை தமிழீழத் தேசியக் கொடியின்கீழ் ஒருங்கிணைக்கும் நிகழ்வாக தமிழீழத் தேசிய விளையாட்டு விழா அமைகின்றது என்றார்.

மூன்றாவது தமிழீழத் தேசிய பெருவிளையாட்டு விழா இம்மாதம் 20ஆம் திகதிமுதல் 27ஆம் திகதி வரை கிளிநொச்சி மத்திய மைதானத்தில் . இடம்பெறவுள்ளது.

இப் போட்டியில் தாயகத்தின் 8மாவட்டங்களைச் சேர்ந்த 2ஆயிரத்திற்கு மேற்பட்ட வீர,வீராங்கனைகள் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி-62,8)

# மருந்து கொள்வனவுக்கு 100கோடி நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகளில நிலவிவரும் மருந்துத் தட்டுப்பாடுகளை நீக்கவென திறைசேரி 100 கோடி ரூபாவை சுகாதார அமைச்சுக்கு வழங்கியுள்ளது.

இதனையடுத்து அத்தியாவசியமான மருந்துப் பொருட்களை உடனடியாகக் கொள்வனவுசெய்து அரச வைத்தியசாலைகளுக்கு அனுப்ப சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (தி-60)

# கணனிகளை மிக வேகமாக தாக்கும் புதிய வைரஸ்

(கொழும்பு)

கணனிகளைத் தாக்கிப் பயங்கர விளைவுகளை ஏற்படுத்தும் புதிய கணனி வைரஸ் ஒன்று தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 26 ஆம் திகதி முதல் கணனிகளில் மிக வேகமாகப் பரவி வருவதாக நம்பப்படும், **''Worm - Mimail - Ror - W 32/ Mydoom@ MM''** என்ற பெயர் கொண்ட இந்தப் புதிய வைரஸ், **Error, Status, Server Report, Mail Transaction Failed, Mail Delivery System, Hello, Hi** என்ற ஈ -மெயில் தலைப்புகளின் மூலம் பரவுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எனவே, இத்தகைய தலைப்புகளுடன வரும் ஈ - மெயிலின் உள்ளே **Doc. bat, Document. Zip, Message. Zip, Readme. Zip, Tent. Pif, Ehllo. Cmd, Body. Scr, Test. htm Pif, Data. txt. exe, file. Scr** என்ற பெயர்களில் ஒரு பத்திரம் இணைக்கப்பட்டிருப்பதாகவும், எக்காரணம் கொண்டும் இவ்விணைப்புக்களைத் திறக்கவோ அல்லது அழுத்தவோ வேண்டாம் என கணனிப் பாவனையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கணனிகள் இந்த வகை வைரஸினால் பாதிப்புக்குள்ளானதா என்பதையும், அப்படிப் பாதிப்புக் குள்ளாகியிருந்தால் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் "மைக்ரோசொ.:.ப்ற்" இணையத்தளத்தில் விபரமாக அறிந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தற்செயலாக மேற்படி இணைப்புக்களைத் திறந்தால், அவை உடனடியாகத் தன்னிச்சையாக இயங்கி அத்தனை ஈ- மெயில முகவரிகளுக்கும் இந்த வைரஸை அனுப்பிவிடும். இவ் வாறானவற்றால் அவுட்லுக், அவுட்லுக் எக்ஸ்பிரஸ், ஈ -'மெயில அனுப்பிகள், ஈ - மெயில் சம்பந் தமான மென்பொருட்கள் ஆகியன நேரடிப் பாதிப்புக்குள்ளாகும் எனவும் அறிவுறுத்தப பட்டுள்ளது.

(தி-18)

# தமிழர் கூட்டமைப்புத்தான் ஆட்சியைத் தீர்மானிக்கும்

## பத்திரிகையாளர் தேசப்பிரிய ஆரூடம்

(கொழும்பு)

தமிழர் கூட்டமைப்புத்தான் எதிர்வரும் ஆட்சியைத் தீர்மானிக்கப் போகிறது. தெற்கிலே இதுவரை காலமும் காணப்படாத அளவுக்குப் பாரிய வன்முறைகளும் குற்றச் செயல்களும் இம் முறை இடம்பெறப்போகிறது. கொழும்பு இப்பொழுது அமைதியாக இருக்கிறது. வரப்போகும் இரத்தக் களரி மிக்க தேர்தலுக்கு இது அடையாளமா? என்று கேட்கத் தூண்டுகிறது. இவ்வாறு சண்டேரைம்ஸ் பத்திரிகையின் ஆய்வாளரும், பிரபல பத்திரிகையாளரும், சுதந்திர தேர்தல் கண்காணிப்புக் குழுவின் முக்கியஸ்தர்களில் ஒருவருமான சுனந்த தேசப்பிரிய கருத்துக்கூறினார்.

வலம்புரியின் "தேர்தல் களம்" பகுதிக்கு அவர் அளித்த விஷேட பேட்டியிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அர்ப்பணிப்புள்ள தலைமைகளுக்காக இந்நாட்டு மக்கள் தேடல்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இங்கு எப்பாடுபட்டாவது ஆட்சியைக் கைப்பற்றி விடவேண்டும் என்னும் பேராவாவில் அரசியல் வாதிகள் ஆலாய்ப்பறக்கிறார்கள். அதன் பிரதிபலிப்புத்தான் இங்கு அடிக்கடி நிகழும் தேர்தல்களாகும்.

சிறிது காலத்திற்கு முன்பு இந்தியாவில் காணப்பட்ட இவ்வாறான நிலைமை இப்பொழுது இலங்கைக்கு வந்து விட்டதாகவே கருத வேண்டியுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையைத் குறைகூறியபடியே அதை அனுபவிப்பவர்கள் எவ்வளவுக்கு அதிகார துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்பதை நாம் இப்பொழுது கண்கூடாகக் காண்கிறோம். "அதிகாரம் மனிதனை ஊழலாக்குகிறது, பரிபூரண அதிகாரம் அவனை பரிபூரணமாகவே ஊழல் ஆக்குகிறது **(Power Corrupts man, Abosolute Power Corrupts Him Absolutely)** என்ற வாசகம் உறுதியாகியுள்ளது.

வரவிருக்கின்ற தேர்தல் நியாயமானதும் நீதியானதுமான முறையில் நடைபெறும் என்பதில் எனக்கு மிகுந்த ஐயப்பாடு இருக்கின்றது.

ஆட்சியைப்பிடிக்கவேண்டுமென்பதற்காகக் கட்சிகளின் தலைமைகளும், ஆசனங்களைப் பிடிக்கவேண்டுமென்பதற்காக வேட்பாளர்களும் தங்களாலான எல்லா வழிகளிலும் முயற்சி செய்யப்போகிறார்கள் இதில் வன்முறையே கூடிய பங்கை வகிக்கப் போகிறது. என நான் கருதுகிறேன் என்றும் அவர் கூறினார்.

எதிர்வரும் பாராளுமன்றத்தில் ஆட்சியமைப்பது யார்? என்று தீர்மானிக்கும் ஒரு சக்தியாக தமிழர் கூட்டமைப்பு அமையுமா? என்று கேட்டதற்கு இரு பெரும் கட்சிகளுக்கும் சிறிய வித்தியாசத்தில் தான் ஆசனங்கள் கிடைக்கப் போகின்றன. நிச்சயமாகத் தமிழர் கூட்டமைப்புத் தான் எதிர்வரும் ஆட்சியைத் தீர்மானிக்கப் போகிறது என்ற ஆருடத்துடன் முடித்தார் சுனந்த தேசப்பிரிய. (யே)

# வன்னி மாவட்டத்தில் வேட்பாளர்கள் தெரிவு

(வவுனியா)

வன்னி மாவட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் கட்சிகளுக்கிடையில் வேட்பாளர்களின் எண்ணிக்கை பங்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி தமிழர் விடுதலைக் கூட்டணி - 3, ரெலோ - 3, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் -2, ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஸ்அணி) - 1 என வேட்பாளர்கள் நிறுத்தப் பட்டுள்ளனர்.

சுரேஸ் அணி சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் போட்டியிடவுள்ளார். (த-13)

# இனவாதிகளுக்குப் பதில் தரவேண்டியது தமிழர்களின் தலையாய கடமை!

## அறைகூவுகிறார் அடைக்கலநாதன்

(கொழும்பு)

இனவாதிகளின் கோரிக்கைகளுக்குப் பதில் தரவேண்டியது அனைத்துத் தமிழர்களினதும் தலையாய கடமையாகும். நம் மத்தியிலிருக்கும் பாகுபாடுகளை மறந்து தெற்கின் இனவாதிகளிக்குப் பதில் கொடுக்க அனைவரும் அணிதிரண்டு வாருங்கள் இவ்வாறு அறைகூவல் விடுத்தார் தமிழர் கூட்டமைப்பின் முக்கியஸ்தரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன்.

வலம்புரியின் "தேர்தல் களம்" பகுதிக்கு வழங்கிய விஷேட செவ்வியிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார். தெற்கிலே இனவாதத்தைக் கக்குகின்ற அரசியல்வாதிகளும், அரசியல் கட்சிகளும் இப்பொழுது ஓரணியில் திரண்டுள்ளன. சமாதானத்திற்கும், தமிழர்களின் உரிமைகளுக்குமெதிரான இவர்கள் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைப்பார்களானால் மீண்டும் யுத்தம் வெடிப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

அதுமட்டுமல்லாமல் தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான முன்னெடுப்புக்குத் தமிழர்கள் தங்களது ஒட்டுமொத்த ஆதரவை இந்தத் தேர்தல் மூலம் சர்வதேச சமூகத்துக்குத் தெரிவிக்கவேண்டும்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரனும் தமிழர் கூட்டமைப்போடு இணைந்து இலங்கைத் தமிழர்களின் ஏகோபித்த ஒற்றுமையை வெளிப்படுத்த முன்வந்திருக்கும் இத்தருணத்தில் தமிழர்கள் அனைவரும் ஏகோபித்த தமது ஒற்றுமை உணர்வை வெளிப்படுத்தவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

வன்னிப்பகுதிகளில் கடந்த தேர்தல்களைப் போலவே இம் முறையும் உங்களுக்கு கவர்ச்சிகரமான ஆதரவு கிட்டுமா? அதற்கேற்ப உங்களுடைய முன்னைய வாக்குறுதிகளை நிறைவேற்றியிருக்கிறீர்களா என்று கேட்டபோது,

நாங்கள் கொள்கைக்காக அரசியல் நடத்துகிறோம். எந்த அற்ப சலுகைகளுக்காகவும் சோரம் போனதில்லை. எங்களுடைய கொள்கையின் அடிப்படையில் நின்று மக்களுக்கு எம்மாலான சேவைகளைச் செய்துள்ளோம் இதனை மக்கள் நன்கறிவார்கள். அதனால் நிச்சியமாகக் கடந்த காலங்களைப் போலவே மக்கள் இம் முறையும் எமது கொள்கைக்கு வாக்களிப்பார்கள் என்றால்,

கூட்டமைப்பில் இருக்கின்ற சில பிரமுகர்கள், சின்னத்துக்குத்தான் வாக்களிக்க வேண்டும் என்று கூறுவது பற்றி உங்களது நிலைப்பாடு என்ன என்ற கேள்விக்குப் பதிலளித்த செல்வம் அடைக்கலநாதன், இந்த நிலைப்பாட்டுக்கு நான் முற்றிலும் மாறுபாடுடையவன் ஏனென்றால் வாக்காளனுக்குத் தனது எம். பியைத் தெரிவு செயயும் அடிப்படையிலான உரிமையை இது மறுத்துரைக்கின்றது. இந்த உரிமை ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும் என்றும் கூறினார். (யே)

# தேர்தல் களம்

# ஸ்ரீ.சு.கட்சி - ஜே.வி.பி.கூட்டணி சமாதானத்தை முன்னெடுக்காது

## சுரேஷ் பிரேமச்சந்திரன்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. கூட்டமைப்பு ஒருபொழுதுமே சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லமாட்டாது. இவ்வாறு வலம்புரியின் தேர்தல் களம் பகுதிக்கு வழங்கிய விஷேட செய்தியில் குறிப்பிட்டார் தமிழர் கூட்டமைப்பின் முக்கியஸ்தரும், ஈ.பி.ஆர்.எல். எவ் (சுரேஷ்) அணியின் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன.

பலரது எதிர்பார்ப்புக்கள் எதிர்வு கூறல்கள் எனபவற்றிற்கு மாறாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. கூட்டணி அமோக வெற்றியீட்டி ஆட்சியமைக்குமாக இருந்தால் தமிழர் கூட்டமைப்பு, தமிழர் பிரச்சினை தொடர்பில் இக் கூட்டமைப்பினரோடு சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளுமா என்று கேட்டதற்கு, சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பில் தீர்மானங்கள் எடுக்க வேண்டியது தமிழீழ விடுதலைப்புலிகள் தான். ஆனால் மேற்படி கூட்டு முன்னணியினர் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பார்களா? என்பது கேள்விக்குரியது.

ஏனெனில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை ஜே.வி.பியினர் நிராகரிப்பது மட்டுமல்லாது, புலிகள் ஆயுதங்களை கீழே வைத்தால் தான் அவர்களோடு பேச முடியும் என்ற கடுமையான நிலைப்பாட்டையும் அக்கட்சி கொண்டிருக்கிறது. அத்தோடு இனவாதக் கருத்துக்களை மிகவும் காரசாரமாகவும் அது தென் பகுதிகளில் பிரசாரம் செய்கிறது.

இவ்வாறான ஒரு கட்சியுடன் ஜனாதிபதி ஏற்படுத்தியிருக்கும் இந்தக் கூட்டு முன்னணியானது நிச்சயமாகச் சமாதான முன்னெடுப்புக்களை செய்வதென்பது சந்தேகமே. அவர்களோடு நாங்கள் இணைந்து போவது என்பதும் சாத்தியமற்றது என்றார்.

அப்படியானால் ஐக்கிய தேசியக் கட்சியுடன் தான் உங்களுக்கு ஈடுபாடு இருக்கும் என்கிறீர்களா என்றுகேட்டோம். ஐக்கிய தேசியக் கட்சியின் வரலாற்றையும், அதன் செயற்பாடுகளையும் எடுத்து நோக்கினால் அதனையும் பூரணமாக நம்புவதும் விவாதத்திற்குரிய விடயமாகும். ஆனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தான் ஓரளவுக்கேனும் தமிழர் பிரச்சினைகளை மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தோடு பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க முன்வந்தது. அவர்களோடு தொடர்ந்தும் இம் முயற்சிகளில் ஈடுபடுவது நன்மை பயக்கும் என்றே நம்புகிறேன் என்றார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஏகபிரதிநிதித்துவம் பற்றிய உங்களது பார்வை என்ன என்று கேட்டதற்கு தமிழர்களின் பிரச்சினைக்கு உலக அங்கீகாரம் பெற்றுத்தந்தது புலிகளின் ஆயுதப் போராட்டமும், ஆயுத ரீதியிலான அவர்களது பலமும் தான்.

இந் நேரத்தில் தமிழ் கூறும் நல்லுலகம் புலிகளின் கைகளைப் பலப்படுத்தி உலகுக்கு எமது ஒற்றுமையை வெளிப்படுத்தவேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தார். (யே)

# பாராளுமன்றம் கலைப்பு பங்குச் சந்தைக்கு பாதிப்பில்லை

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சிமீண்டும் அரசமைக்கும் என்ற நம்பிக்கையுடன், நாடாளுமன்றம் கலைக்கப் பட்டபின்னரும், ஸ்ரீலங்காவின் பங்குச் சந்தை நடவடிக்கைகள் மேம்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

கொழும்பு பங்குச் சந்தைப் பங்குதாரர்களை மேற்கோள் காட்டி ரொய்டர் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியிலேயே மேற்படி தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பங்குச் சந்தை நடவடிக்கைகள் மேலும் ஸ்திர நிலையை அடையும் என எதிர்பார்க்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ள அச் செய்தி, கொழும்புப் பங்குச் சந்தையின் இன்றைய பணப்பரிமாற்றம் 258 மில்லியன் ரூபா எனவும் தெரிவித்துள்ளது.

எனவே, இனிவரும் காலத்தில் நாட்டில் யாருடைய ஆட்சி ஏற்படுமென்ற ஊகங்கள், உலக நாடுகள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்களிடம் நிலையான எண்ணத்தை எற்படுத்தியுள்ளதாலேயே, கொழும்புப் பங்குச் சந்தையில் வீழ்ச்சி ஏற்படாமல் தொடர்ந்தும் அதன் நிலையை தக்கவைத்துக் கொண்டிருப்பதுடன், அதன் செயற்பாடுகள் மேம்பாடடைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (தி-18)

# தேர்தல் ஆணையாளருடன் அரசியல் கட்சிகள் சந்திப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பேட்டியிடவுள்ள அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும், தேர்தல் ஆணையாளருக்குமான சந்திப்பு மார்ச் மாதம் முதலாம் வாரத்தில் நடைபெறவுள்ளதாக தோதல் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளருக்கும் சகல மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பொன்றிலேயே மேற்கண்ட தகவலை தேர்தல் திணைக்கள உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் செய்த தினம் முதல் வாக்குகள் எண்ணப்படும் நாட்கள் வரை தேர்தலுடன் தொடர்புடைய செயற்பாடுகள் சம்பந்தமாகவும் இங்கு கலந்துரையாடப் பட்டுள்ளது.

அடுத்த மாதம் இடமபெறவுள்ள இச் சந்திப்பினை அடுத்து, பிரதி வெள்ளிக்கிழமை தோறும் சந்திப்புக்களை மேற் கொண்டு தேர்தல் தொடர்பாக அரசியல் கட்சிகள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் ஆராய்வதெனத் தீமானிக் கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ம)

# ஐ.தே.க. வேட்பாளர் தெரிவு 90 சதவீதம் பூர்த்தி

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் தெரிவு 90 வீதம்வரை பூர்த்திசெய்யப்பட்டிருப்பதாக கட்சித் தலைவர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசியக் கட்சியின் சார்பில் வடக்கு-கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் வேட்பாளர்கள் நிறுத்தப்படுவார்கள்.

இன்னும் சில தினங்களில் பிரசார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும். கண்டியிலேயே முதன் முதல் பிரசாரம் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவித்தார். (தி-61,10)

# வாக்காளர் அட்டை எழுதும்பணி ஆரம்பம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்றவர்களுக்கான வாக்காளர் அட்டைகளை எழுதும் பணிகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, அஞ்சல் மூலமாக வாக்களிக்க விரும்புவோர்களுக்கான விண்ணப்பப் படிவங்களும், மாவட்ட செயலகத்திற்கு வந்தடைந்துள்ளதாக மாவட்டத் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (தி-61,10)

# உலக அணியில் மாற்றம் ஐ.சீ.சி.தெரிவுக்குழு அறிவிப்பு

அடுதத வருடம் தென்னாபிரிககாவில் நடைபெறவுள்ள உலக அணிக்கும்,



அவுஸ்திரேலிய அணிக்கும் இடையிலான கிரிக்கெற் சுற்றுப் போட்டியில உலக அணியில் மாற்றம் செயயப்பட்டுள்ளது.

இலங்கை அணி சார்பில் ஐ.சீ.சியின் முன்னைய தெரிவில முத்தையா முரளிதரன் மட்டுமே தெரிவாகியிருந்தார். ஐ.சீ.சியின் தெரிவிக் குழு கடந்த வாரம் கூடி இறுதியாக வீரர்களைத் தெரிவு செய்துள்ளது.

3 ஒரு நாள் போட்டியும் ஒரு டெஸ்ட் போட்டியும் கொண்ட தொடர் இவ்விரு அணிகளுக்குமிடையில் நடைபெறவுள்ளது.

ஒரு நாள் போட்டிக்குத் தெரிவாகியுள்ள உலக அணியில் இலங்கை வீரர்களான சனத் ஜெயசூரியா, முததையா முரளிதரன், குமார் சங்ககார, சமிந்தவாஸ் ஆகிய நான்கு வீரர்களும் இடம்பிடித்துள்ளனா். டெஸ்ட் போட்டியைப் பொறுத்தவரை முத்தையா முரளிதரனும், குமார் சங்ககாரவும் தெரிவாகியுள்ளனர். இப் போடடிகளில் உலக அணி சார்பில் விக்கெற காப்பாளராக குமார் சங்ககார தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சர்வதேச கிரிக்கெற் தரவரிசைப் பட்டியலின்படியே உலக டெஸ்ட் அணியும், உலக ஒருநாள் அணியும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன என ஐ.சீ.சி தெரிவித்துள்ளது.

**உலக ஒருநாள் அணியில் அங்கம் வகிக்கும் வீரர்களின் விபரம் வருமாறு,**

சச்சின் டெண்டுல்கர், கிறிஸ் கையல் சனத்ஜெயசூரியா, பிரையன்லாரா, ஜக்கலிஸ், யுசுப் யுகானா, குமார் சங்ககார, அன்ரூ பிளின் டோப், ஷோன பொல்லக்,சமிந்த வாஸ், முத்தையா முரளிதரன்.

**உலக டெஸ்ட் அணியில் அங்கம் வகக்கும் வீரர்கள் விபரம் வருமாறு,**

முத்தையா முரளிதரன், குமார் சங்ககார, ராகுல் ட்ராவிட், ஜக்குவா கிபஸ, ஜக்கலிஸ், ஷோன் பொலலக், நிக்கி போயே, சச்சின் டெண்டுல்கா், மைக்கல் றிச்சட்சன், பிரையன் லாரா, சொய்ப் அக்தார்.

இந்தப் போட்டிகளில் வெற்றி பெறும் அணிக்கு ஒரு மில்லியன் பேறுமதியான அமெரிக்க டொலர்கள் பரிசாக வழங்கப்படும் என ஐ.சீ.சி.அறிவித்துள்ளது. அடுத்த ஆண்டு செப்டெம்பர் மாதம் தென்னாபிரிக்காவில் இந்தப் போட்டி நடைபெறவுள்ளது. (தி-121)

# கிளைன் மெக்ராத் விரைவில் ஓய்வு

சர்வதேச கிரிக்கெற் அரங்கில் தலைசிறந்த வேகப்பந்து வீச்சாளர்



களுள் ஒருவராகக் காணப்படும் கிளைன மெக்ராத் ஓய்வுபெறும் நிலையில் உள்ளார். காலில் ஏற்பட்ட காயத்தில் இருந்து இன்னும் முழுமையாகக குணமடையாத மெக்ராத் இலங்கைத் தொடரில் பங்கேற்கமாட்டாா எனத்தெரிகிறது. இவர் கடந்த ஒரு வருடமாக கணுக்கால காயததால் பெரிதும் அவதிப்பட்டு வருகிறார்.

அவுஸ்திரேலியாவின் மிகச் சிறந்த வேகப்பந்து வீச்சாளரான இவர் 2003யூலையில் நடந்த பங்களாதேஷிற்கு எதிரான டெஸ்ட்டிற்குப பிறகு வேறு எந்தப் போட்டிகளிலும் பங்கேற்கவில்லை. இந்தியாவுக்கு எதிரான கடைசி 2டெஸடில் பங்கேர்பார் என அறிவிக்கப்பட்டது. ஆனால கடைசி நேரத்தில் பங்கேற்க இயலாது என மெக்ராத் கூறிவிட்டார்.

இவருக்கு நெருக்கமான சிலர் மெக்ராத் 34வயதை எட்டிவிட்டார் உடல்நிலை ஒத்துழைக்காத நிலையில் இவர் விரைவில் ஓய்வுமுடிவை மேற்கொள்ளலாம் என்று கூறுகின்றனர். இந்த முடிவையும் மெக்ராத் பரிசீலித்து வருவதாகவும் தெரிகிறது. இலங்கை டெஸ்ட் தொடரில் சிலரை அணியில் சேர்க்க ஆஸி. தோ்வுக்குழுத் தலைவர் டிரவர் ஹான்ஸ் விரும்புகிறார். ஆனால் மெக்ராத்தின விருப்பம் என்ன? என்பது இனனும் சில வாரங்களில் தெரியவரும்.

(தி-121)

# பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்டப்போட்டி யூனில்

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான 9ஆவது மாகாண மடட விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும யூன் மாதம் 5ஆம் திகதி முதல் 30ஆம் திகதிவரை வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளதாக மேலதிக மாகாண கல்விப பணிப்பாளர் வி.இராசையா அறிவித்துள்ளார்.

கோட்ட மற்றும் வலய மட்டங்களில் வெற்றிபெற்றோர் மாகாண மட்ட போட்டிகளில் பங்குபெறவுள்ளனர்.

ஒவ்வொரு மாவட்ட மட்டத்தில் இருந்தும் குழுநிலைப் போட்டிகளில் வெற்றிபெற்ற முதல் இரு அணிகளும் மாகாண மடட போட்டிகளில் பங்குபற்றவுள்ளன.

இதன் பிரகாரம் மாகாணமட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற பாடசாலைகள, மாவட்ட விளையாட்டுக் குழுத்தலைவர் அல்லது செயலாளர் ஊடாக தமது விண்ணப்பங்களை அனுபபமுடியும் எனத தெரிவிக்கப்பட்டுள்ளது. உடற்பயிற்சிப் போட்டிக்கான விண்ணப்பங்களை எதிர்வரும மே மாதம் 23ஆம் திகதிக்கு முன்னரும் பெருவிளையாட்டுக்கள் மற்றும் மெய்வல்லுநர் போட்டிக்கான வண்ணப்பங்களை மே மாதம் 31ஆம் திகதிக்கு முன்னரும் மாகாண கல்வி த திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கு மாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(தி-121)

# உலக சம்பியன் றேசியர் பொலிஸாரால் கைது

முன்னாள் உலக அதிபார குத்துச்சண்டைச் சம்பியன் ஜோவ றேசியர் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நபர் ஒருவரைத் தாக்கியமைக்காகவும், வீட்டில் வன்முறைகளில் ஈடுபட்டமைக்காகவும் முன்னாள் உலக அதிபார குத்துச்சண்டை சமபியனான ஜோவ றேசியர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

1964ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் குத்துச்சண்டைப் போட்டியில் தஙகப் பதக்கம் வென்ற ஜோவ றேசியர், 6வருடங்களின் பின்னர் ஜிம்மி எலிப் என்பவரை நியூயோர்க் குத்துச சண்டையில் வென்று உலக அதிபாரச சம்பியனானார். 1973ஆம் ஆண்டு ஜோர்ச் போமனிடம் சம்பியன் பட்டத்தைப் பறிகொடுத்த றேசியர், முகமட அலியுடனான குத்துச்சண்டைப் போட்டியில் பிரபல்யமானார். 1971ல் முகமட் அலியை வெற்றிகொண்ட சிலர் 1974ம்,1975ம் ஆண்டுகளில் படு தோலவிகளைத் தழுவியிருந்தார்.(தி-121)

# இலங்கையில் பாதுகாப்பு பிரச்சினை இல்லை -பேணாட்

(கொழும்பு)

தற்போது இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணியின் முகாமையாளர் ஸடீவ் பேணாட் பாதுகாப்புக் குறித்து தங்களுக்கு இலங்கையில் எதுவித பிரச்சினையும் ஏற்படவில்லையெனத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பொதுத்தேர்தல ஒன்று நடைபெறவிருப்பதால் பாதுகாப்பு பிரச்சினைகள் தோன்றலாம் என வெளியான செய்திகளை அவர் மறுத்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள முன்னர் பிரச்சினைகள் குறித்து வெளியுறவுத் திணைக்களங்களிடம் கலந்தாலோசித்தோம்.

இலங்கை அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையில் 3 வது டெஸ்ட் போட்டி பொதுத் தோதலுக்கு 4 நாட்களுக்கு முன்னா கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் இடம்பெறவுள்ளது. கடந்த பொதுத் தேர்தலின் போதும்கூட மேற்கிந்திய தீவுகள் அணி இலங்கையில் வெற்றிகரமான சுற்றுப் பயணம் ஒன்று மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (தி-121)

# பங்களாதேஷ்~சிம்பாப்வே போட்டித் தொடர் ஆரம்பம்

சிம்பாப்வேக்கு கிரிக்கெற் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் பங்களாதேஷ் கிரிக்கெற் அணி சிம்பாபவே அணியுடன் 3நாள் கொண்ட போட்டியில் விளையாடி வருகிறது.

முதல நாள் ஆட்டநேர முடிவின் போது சிமபாப்வே அணி 5விக்கெற் இழப்பிற்கு 71ஓட்டங்களைப் பெற்றுளளது. பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பில் இளம் பந்து வீச்சாளர் அலாவுதீாஹபீா 9ஓவர்கள் பந்து வீசி 24ஓட்டங்கள் மாத்திரம் கொடுத்து 4விக்கெற்றுக்களைக் கைப்பற்றியுள்ளார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி சகல விக்கெற்றுகளையும் இழந்து, 199ஓட்டங்களை மாததிரமே பெற்றது. இதில் ஆரம்பத துடுப்பாட்ட வீரர் சகீர கசீம் 75ஓடடங்களையும், மஞ்சுஸ் இஸ்லாம 40ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

(தி-121)

# அவுஸ்திரேலிய அணியினரை இலங்கை அணி சமாளிக்குமா?

அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணியினர் 5ஒருநாள் போட்டிகளில் பங்கேற்பதற்காக நேற்று முன்தினம் காலை இலஙகை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இக்கால கட்டத்தில் உலகின் கிரிக்கெற் ரசிகர்களை தன்வசம் ஈர்த்து வைத்துள்ள அவுஸ்திரேலிய அணியினர், தாயக ஆடுகளங்களில் விளையாடியது போல் இலங்கையிலும் விளையாடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலஙகை - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் முதலாவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெற் போட்டி எதிர்வரும 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை தம்புள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கைக்கு வந்துள்ள 15பேர் கொண்ட அவுஸ்திரேலிய அணியினரின் பலம்வாய்ந்த துடுப்பாட்ட வரிசையை அலங்கரிப்பதாக ஆரம்ப துடுப்பாட்டக்காரர்களான அடம்ஸ் கில்கிறிஸ், மத்தியூ ஹேடன் மற்றும் றிக் கிப் பொண்டிங், டேமியன் மார்ட்டின், மைக்கல் பெவன், மைக்கல் களார்க், சைமன்ஸ் கட்டிச் ஆகியோர் காணப்படுகின்றனர். அவுஸ்திரேலியா பலம் வாய்ந்த அணியாகக் காணப்படுவதற்கு இவர்களது பங்களிப்பே முக்கியமாகக காணப்படுகிறது. இவ் அணியில் சிறந்த சகலதுறை ஆட்டக்காரராக அன்ரூ சைமன்ஸ் விளங்குகின்றார்.

உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றிய அவுஸ்திரேலிய தாயக ஆடுகளத்தில் சிம்பாப்வே, இந்திய அணியினரை எதிாகொண்டு இறுதிப் போடடியில் இந்திய அணியை அபார மாக வெற்றியீட்டியது. இந்த வெற் றிக்களிப பில் இலங்கை வந்துள்ள அவுஸ்திரேலிய அணியினா் இலங்கை அணியினரை சமாளிப்பார்களா என்பது கிரிக்கெற் ரசிகர்களின் ஆர்வமாகும். (தி-121)

# சதுரங்கப் போட்டி முடிவுகள் வெளியாகின

நெல்லியடி சயன்ஸ் அக்கடமி ஆதரவில் வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற சதுரங்கப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

**15 வயதிற்கு உட்பட்ட ஆண்கள் பிரிவு**

யாழ்.பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி முதலாம் இடம், யா/கரவெட்டி ஞானாச்சாரியார் கல்லூரி இரண்டாம் இடம், யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மூன்றாம் இடம்.

**15 வயதிற்குட்பட்ட பெண்கள்**

முதலாம் இடம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் இரண்டாம் இடம் வட.இந்து மகளிர் கல்லூரி, முன்றாம் இடம் ஞானாச்சாரியார் கல்லூரி.

19வயதிற்குட்பட்ட போட்டிகள் பின்னர் அறிவிககப்படும் என வடமராட்சி கோடடக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.(யே)

## மெய்வன்மை போட்டி

(ஏழாலை)

யாழ்.ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த 7 ஆம திகதி பாடசாலை அதிபர் செ.சிவராசா தலைமையில நடைபெற்றது. முதன்மை விருந்தினராக செ.குபேரநாதனும் சிறப்பு விருந்தினராக அ.பஞ்சலிஙகமும் கலந்து சிறப்பித்தனர்.

இப்போட்டியில் பெருமளவான பொதுமக்களும பாடசாலையின் பழைய மாணவர் மற்றும் பெற்றோரும் கலந்து கொணடனர்.

(யே-206)

## இந்திய அணி பாகிஸ்தான் செல்லும்

இந்தியக் கிரிக்கெற் அணி பாகிஸ்தான் செல்வதில் எந்தவித மாற்றம் இல்லை என மத்திய அரசு தெரிவித்துள்ளது. பாகிஸ்தான் சென்றுள்ள இந்தியக் கிரிக்கெற் வாரியக் குழு அளித்த திருப்தியான தகவலை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக இநதிய கிரிக்கெற் வாரியத் தலைவர் ஜக்மோகன் டால்மியா தெரிவித்துள்ளார்.

திட்டமிட்டபடி இந்திய கிரிக்கெற அணி அடுத்த மாதம் பாகிஸ்தான் செல்லும் என்றும் அவர் சொன்னாா. பாதுகாப்புப் பிரச்சினைகளைக் காரணம் காட்டி இந்தியா, பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தை ரத்துச் செய்யும் என்ற செய்திகளை இந்திய வாரியத் தலைவர் ஜக்மோகன் டால்மியா மறுத்து இந்திய அணியின் சுற்றுப்பயணம் குறித்து எவ்வித சந்தேகமும் இல்லை என்றார்.

(தி-121)

# 19 வயது அணிகளுக்கிடையிலான ஆரம்ப உலகக்கிண்ணக் கிறிக்கெட் போட்டியில் இலங்கை அணி 2 விக்கெட்டால் வெற்றி

19 வயதுக்குட்பட்ட உலகக் கிண்ணக் கிறிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற இலங்கை, சிம்பாவ்வே அணிகளுக்கிடையிலான முதல் நாள் ஆட்டம் போக்றா மைதானத்தில் நடைபெற்றது. இப் போட்டியில் இலங்கை அணி இரண்டு விக்கெட்டால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவ்வே அணி 49.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றது. இவ் அணி சார்பில் எஸ். வில்லியம்ஸ் 47 ஓட்டங்களையும் சி.கரண் டோமி 41 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் எம்.மகறூ 4 விக்கெற்றுக்களையும், எ.மத்தியூஸ் 2 விக்கெட்டுக்களையும், சாணக, குலசேகர, சுறாஜ் ஆகியோர் தலா 1 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 38.2 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்று 2 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது. இலங்கை அணி சார்பில் குலசேகர ஆட்டம் இழக்காமல் 37 ஓட்டங்களையும், டீ.சில்வா 33 ஓட்டங்களையும், சுறாஜ் ஆட்டமிழக்காமல் 9 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சிம்பாவ்வே அணி சார்பில் சிகிம்புறா 3 விக்கெட்டுக்களையும், றைன்ஸ்போர்ட் மற்றும் பஞ்சன்கர ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இவ்வாட்டத்தில் சிறப்பாட்டக்காரராக இலங்கை அணி வீரர் குலசேகர தெரிவு செய்யப்பட்டார்.

(ச-121)

## க.கா.குழுவை ஏற்றிச்செல்ல கடற்படைத் தளபதி அனுமதி

(கொழும்பு)

இலங்கை கடற்படைக் கப்பல்களில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அங்கத்தவர்களை ஏற்றிச் செல்வதற்கு கடற்படைத்தளபதி அட்மிரல் தயாசந்தகிரி இணக்கம் தெரிவித்துள்ளார்.

கடற்படைத் தளபதி தயா சந்தகிரிக்கும் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் ரொன் பியூறு ஹெவ்டேக்கும் இடையில் அணமையில் இடம்பெற்ற சந்திப்பலேயே கடற்படைத் தளபதி இந்த இணக்கப்பாட்டைத் தெரிவித்துள்ளார்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தாகிய பின்னர் கடற்படையின் கப்பல்களில் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் அங்கத்தவர்களை ஏற்றிச் செல்வது வழக்கமாக இருந்தது.

விடுதலைப்புலிகளின் ஆயுதக் கப்பல் ஒன்றைக் கைப்பற்றுவதற்கு கடற்படையினர் மேற்கொண்ட முயற்சிகளுக்கு கண்காணிப்புக் குழுவின் அங்கத்தவர்கள் தடையாக இருந்தார் என குற்றஞ் சாட்டப்பட்டு கடற்படையினர் கண்காணிப்புக்குழுவினரை தமது கப்பல்களில் ஏற்றிச் செல்ல மறுத்து வந்தனர்.

அத்துடன் அப்போது கண்காணிப்புக்குழுத் தலைவராக இருந்தவரையும் நோர்வே அரசு திருப்பி அழைக்கவேண்டும் என கடற்படையினரும் ஜனாதிபதியும் கோரியிருந்தனர்.

இதற்கமைய அப்போதைய கண்காணிப்புக் குழுத்தலைவர் றிக்வே ரெலிவ்சனின் தலைமைப் பதவியை டொன்பியூறு ஹெவ்டே ஏற்றுக் கொண்டமை தெரிந்ததே. (தி-60.10)

## தமிழர்களின் ஒற்றுமையை மக்கள் பொதுத் தேர்தலில் காட்டவேண்டும்

### முன்னாள் எம்.பி. விநாயகமூர்த்தி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று நாம் பாராளுமன்ற உறுப்பினர் பதவியினை இழந்து, சாதாரணமான ஒருவராக உங்கள் முன் இக் கிராமத்தில் பிறந்தவன் என்ற வகையில் வந்துள்ளேன். இப் பாலர் பாடசாலைக்கு மட்டுமல்ல இக் கிராமத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் கடந்த வருடம் நிதியினை ஒதுககிக் கொடுத்தேன்.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் கடந்த தேர்தல் போல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் சேர்ந்தே தேர்தலில் நிற்போம். தமிழீழ விடுதலைப் புலிகளின் பின்னால் எமது கட்சியும் நானும் இணைந்து செயற்படுவோமீ.

இவ்வாறு சரசாலை மத்தி மயூரதி அம்பாள் முன்பள்ளி நன்நீர்க் கிணற்றினை திறந்து வைத்து உரையாற்றிய முன்னாள் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி குறிப்பிட்டார்.

மேற்படி முன்பள்ளி அபிவருத்திச் சபைத்தலைவர் சிவஸ்ரீ ந.இராசேஸ்வரக்குருக்கள் தலைமையில் வைபவம் இடம்பெற்றது.



இந்நிகழ்வில், தொடர்ந்து உரையாற்றிய அவர், தமிழீழ விடுதலைப்புலிகள்தான் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதை தமிழ் மக்கள் நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் மூலம் அரசுக்கு உணர்த்தவேண்டும்.

அப்போதுதான் தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகது விரைவில் தீர்வுகாண முடியும். கடந்த காலங்களிலும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து பாராளுமன்றில் குரல் எழுப்பினோம். இதனை சிங்கள அரசுகள் ஏற்றுக் கொணடதன் விளைவாகவே யுத்த நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டு, தற்போது சுமுகமான நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

இந்நிகழ்வில் தென்மராட்சிக் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர், சரசாலை இராமாவில் பிள்ளையார் ஆலயச் செயலாளர், சமாதான நீதவான் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (தி)

## பொருளாதார நிலைமைகளை விளக்கி அமை.பீரிஸ் ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

இந்த நாட்டின் வருங்கால



சந்ததியினரைப் பாதிக்கும் சில விடயங்கள் குறித்து தீர்மானம் எடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் என்பது மாதிரியான ஒன்றல்ல. இத்தேர்தல் இலங்கையின் வருங்கால பொருளாதாரம் பற்றிய ஒரு விடயமாகும்.

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தனியார் துறைசார் பணியாளர்களின் நலன் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

இதுவரை நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் என்ன செய்தது? இனி வரும் காலத்தில் மக்கள் விடுதலை முன்னணியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் இணைந்து அமைத்துள்ள கூட்டணி என்ன செய்யப் போகிறது என்பதில் பாரிய வேறுபாடுகள் உள்ளன.

குறுகிய இரண்டாண்டு காலத்தில் பொருளாதார முன்னேற்றத்துக்காக ஐக்கிய தேசிய முன்னணி அரசு என்ன செய்தது என்பதை சுருக்கமாகக் கூற விரும்புகிறேன். இக்கால எல்லையில் எமது பொருளாதாரம் சிக்கலான நிலையிலிருந்து சிறிது சிறிதாக விடுபட்டு மெல்ல மெல்லத் தலைநிமிர்ந்து குறைந்த வட்டி நிலையான ரூபா மதிப்பு அதிகரித்த முதலீடு என்ற துறைகளில் முன்னேற்ற மடைந்துள்ளதை அறிவீர்கள்.

பிரதமர் பதவி ஏற்ற காலத்தில் வேலையில்லாப் பிரச்சினைக்கு நாம் முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருந்தோம்.

ஐ.தே.மு. அரசு பல துறைகளிலும் முன்னேறியிருப்பது பெருமைப்படத்தக்க விடயமாகும்.

கமத்தொழில் அபிவிருத்தி இதில் ஒன்று. தரமான விலை, தொழில்நுட்ப ஆலோசனை முதலியவற்றின் மூலம் விவசாயத் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம கண்டுள்ளோம் என ஜனாதிபதிக்கு அமைச்சர் பீரிஸ் அனுப்பி



வைத்துள்ள கடிததத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

## நாச்சியம்மையார் தினம்

(யாழ்ப்பாணம்)

புண்ணிய நாச்சியம்மையார் தினம் எதிர்வரும்19ஆம்திகதி வியாழக்கிழமை காலை9.00 மணிக்கு நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சைவபரிபாலன சபைத் தலைவர் சைவப்புலவர் வ. கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது. (தி-18)

## கடனுதவி

(தொல்புரம்)

வலி-மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள பொன்னாலை கிராம அலுவலர் பிரிவில் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கு ஜீவனோபாயக் கடனுதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கென நியாப் திட்டத்தன் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுளளமைகுறிப்பிடத்தக்கது.(தி-70)

## சின்னம் சூட்டுதல்

(வடலியடைப்பு)

மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவர்த் தலைவர்களுக்கு சின்னம் சூட்டு விழாவும், நாட்டிய நாடக அரங்கேற்றமும் கடந்த 12ஆம் திகதி பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி வேணுகா சண்முகரெட்ணம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப பணிப்பாளர் க.தனபாலசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (தி-21)

## முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பு நிலையங்களைத் தெரிவு செய்வது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கட்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது. (தி-3)

## அமெ.வர்த்தக உறவை தேர்தல் தீர்மானிக்கும்

### அந்நாட்டு பிரதிநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் குறித்து எதிர்வரும் ஏப்ரலில் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலின் முடிவுகள் தீமானிக்குமென அமெரிக்க வர்த்தக பிரதிநிதி ரொபர்ட் சொயிலிக் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் வர்த்தக உறவுகளை ஆழப்படுத்துவது தொடர்பாக வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையுடனான வர்த்தக உறவுகள் குறித்து ரொபர்ட்சொயிலிக் மேலும் கருத்துக் கூறுகையில்,

இலங்கையுடன் வர்த்தக உறவுகளைப பலப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் குறித்து அண்மையில் சிங்கப்பூரில் இலங்கையின் வர்த்தக நுகர்வோர் அமைச்சர் ரவி கருணாநாயக்கவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது.

இதன்போது இருதரப்பு வர்த்தக உறவுகளையும் மேம்படுத்துவது குறித்து ஓர் இணக்கப்பாடு காணப்பட்டிருந்தது. ஆயினும், தற்போது இலங்கையில் தோன்றியுள்ள ஸ்திரமற்ற அரசியல் நிலைமைகளினால் இவ் இணககப்பாடுகள் நடைமுறைபடுத்தப்பட முடியாமல் உள்ளன.

எனவே, எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலின் முடிவுகளைப் பொறுத்தே இலங்கை-அமெரிக்க வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (தி-18)

## கண்காணிப்புக் குழுவினருடன் தேர்தல் ஆணையாளர் இன்று சந்திப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உள்ள 2 இலட்சத்துக்கும் அதிகமான வாக்காளர்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலில் வாக்களிப்பதற்கு தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளுவதற்காக தேர்தல் ஆணையாளா தயானந்த திஸ்ஸநாயக்க, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரையும் அரச சமாதான செயலக உயர் அதிகாரிகளையும் இன்று திங்கட்கிழமை சந்தித்துப் பேசவுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வசிக்கும் 2 இலட்சத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் உள்ளனர்.

இவர்கள் அனைவரும் தேர்தல் தினத்தன்று வாக்களிக்க அனுமதிக்கப்பட்டுள்ள 9 மணி நேரத்திற்குள் தூர இடங்களில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிக்கு சென்று வாக்களிப்பது முடியாத காரியம் என வடக்கு கிழக்கில் உள்ள மாவட்ட அரச அதிகாரிகள் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸ்ஸநாயக்கவுக்கு சுட்டிக்காட்டினார்கள்.

இராஜகிரியவில் உள்ள தேர்தல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல அரச் அதிகாரிகளுக்குமான கூட்டத்திலேயே அரச அதிகாரிகள் இதனைச்சுட்டிக்காட்டினார்கள்.

இதனை அடுத்து அரசாங்க சமாதான செயலக உயர் அதிகாரிகளையும் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவனரையும இன்று சந்தித்து இது பற்றிப் பேசவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் உறுதியளிததார்.

அதன் பின்னர் நாளைசெவ்வாயக கிழமை வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அரச அதிகாரிகளைச் சந்தித்து தாம் எடுத்துள்ள முடிவு குறித்து விளக்குவதாகவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை தேர்தல் சட்டத்தின்படி போதிய பாதுகாப்பிற்காக கொத்தணி வாககுச்சாவடிகளை ஒரே இடத்தில அமைக்க அரசுக்கு அதிகாரம் உள்ளதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (தி-60,10)

## தாயகப் பகுதிகளில் 133 பாடசாலைகளுக்கு மூடு விழா

(கிளிநொச்சி)

கடந்த கால யுத்த அனர்த்தங்கள் காரணமாக தமிழர் தாயகப் பகுதிகளில் உள்ள 2 ஆயிரத்து 8 பாடசாலைகளில் தற்போது 133 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

அத்துடன், 144 பாடசாலைகள் தமது சொந்த இடங்களில் இருந்து வெளியேறி வேறு இடங்களில் இயங்கி வருகின்றன.

தீவக வலயத்திலுள்ள 76 பாடசாலைகளில் 30 பாடசாலைகளும வலிகாமம் வலயத்திலுள்ள 152 பாடசாலைகளில் 21 பாடசாலைகளும், திருமலை வலயக்கிலுள்ள 80 பாடசாலைகளில் 15 பாடசாலைகளும் மன்னார் வலயத்திலுள்ள 75 பாடசாலைகளில் 14 பாடசாலைகளும் யாழ். வலயத்திலுள்ள 119 பாடசாலைகளில் 11 பாடசாலைகளும், தென்மராட்சி வலயத்திலுள்ள 68 பாடசாலைகளில் 10 பாடசாலைகளும் வவுனியா வலயத்திலுள்ள 88 பாடசாலைகளில் 22 பாடசாலைகளும் மடு வலயத்திலுள்ள 41 பாடசாலைகளில் 5 பாடசாலைகளும் துணுக்காய் வலயத்திலுள்ள 54 பாடசாலைகளில் 5 பாடசாலைகளும் தற்காலிகமாக மூடப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. (தி-64,8)

## இன்று ஒரு தகவல்

# மன நலம்

நலம்-நலமறிய ஆவல் என்று கடிதங்களில் எழுது வது நமது வழக்கம். உடல் நிலை நன்றாக இருக்கின றதா? என்னும் அர்த்தத்தில் தான் அப்படி எழுதுகின் றோம் . மனம் நன்றாக இருக்கின்றதா என்று யாரை யும் நாம் கேட்பதில்லை. நாம் அபபடிக் கேட்டாலும் சந் தேகப்படுவார்கள்.

உடல் நிலை நன்றாக இருந்தால் மனது நன்றாக இருக்கும். அதேபோல் மனம் நன்றாக இருந்தால் உடலும் நன்றாக இருக்கும். உடலை நன்றாக வைத் துக் கொள்ளுவது எப்படி என்று எல்லோருக்கும் தெரி யும! மனதை நன்றாக வைத்திப்பது எப்படி? அதுதான் இன்றைக்கு தகவல்!

முதலில் நாம் யார் என்பது நமக்கு நன்றாகத் தெரிய வேண்டும். நம்மைப் பற்றிய அறிவு நமக்குத் தேவை. நமது பலம் எனனவென்று நமக்குத் தெரியவேண்டும். நமது பலவீனம் என்னவென்றும் நமக்குத் தெரிய வேண டும். நம் பலவீனங்களில் எவற்றைப் போக்கிக் கொள்ள முடியுமோ அவற்றைப் போக்கிக்கொள்ள வேண்டும். நமது பலம் என்னென்னவோ அவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இரண்டாவது விஷயம் என்னவென்றால்,யாரையாவது பார்த்துவிட்டு அவர் மாதிரியே நாமும் ஆக வேண்டும் என்று ஆசைப்படக் கூடாது. நாம் நாமாகத்தான் இருக்க வேண்டுமே தவிர இன்னொருவர் மாதிரி ஆகக் கூடாது.

திறமைகளை நான்குவகையாகப் பிரிக்கலாம். நமக் குத் தெரிந்த திறமைகள் ஒருவகை, மற்றவர்களுக் குத் தெரிந்த திறமைகள் ஒருவகை. நமக்கு மட்டும் தெரிந்து மற்றவர்களுக்குத் தெரியாத திறமைகள் ஒருவ்கை. இப்படிப் பிரித்துப் பார்த்து நமது திறமை களைக கண்டுபிடித்து வளர்த்துக்கொள்ள வேண்டும்.

இன்னொரு விஷயம் அடைய முடியாத இலட்சியங் களை இலகுவாக வைத்துக் கொண்டு அதையடைய வேண்டுமென்று நினைத்து அவஸ்தைப்படக்கூடாது. அது மனதை நிம்மதியில்லாமல் செய்துவிடும். நல்ல வர்களாகப் பார்த்துச சிநேகம் கொள்ளவேண்டும். பிரச் சினைகளையும் போராட்டங்களையும் கண்டு பயந்து விடக் கூடாது. அதையெல்லாம் எதிர்த்து நின்று சமா ளிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். ஜெயித்துவிட்டால் துள்ளுவதும் தப்பு, தோற்றுவிட்டால் துவண்டு போவதும் தப்பு. நீங்கள் எந்த உத்தியோகத்திலிருக்கின்றீர்களோ அல்லது எந்தத் தொழிலை செய்கிறீர்களோ அது குறித்த திறமைகளை நன்கு வளர்த்துக்கொள்ள வேண்டும். சூழ் நிலைக்குத் தகுந்தது போல் நம்மை மாற்றிக் கொள்வ தறகும் கற்றுக்கொள்ள வேண்டும். இவறறைப் பழக்கத் தில கொண்டு வந்து விட்டால் மனம் எப்போதும் தெளி வாக இருக்கும்.

உணர்ச்சிகளை மறைத்து வைப்பது, மனப் போராட் டங்களை அடக்கிவைப்பது போன்றனவெல்லாம் மன நலத்தைப் பாதிக்கக் கூடிய விடயங்கள். அதனால் மன திற்கு இதமான ஒரு நண்பரைத் தேடிக்கொள்வது நல் லது. அவரிடம் உங்கள் மனச் சுமையைக் கூறுங்கள். அப்படிச் சொன்னாலே உங்கள் சுமை குறையும்.

அபபடியெல்லாம் நிபுணர்கள் நமக்கு நிறைய யோச னைகளைக் கூறுகின்றனர். அதனால் மனதையும் உடலையும் நனறாக வைத்துக்கொண்டால் வாழ்க்கை நமக்கு உற்சாகமாக இருக்கும். இல்லாவிட்டால் அது உபத்திரமாகத்தான் தெரியும்.

மனதிற்கு இதமான ஒரு நண்பரைத் தேடிக் கொள் வது நல்லது என்று கூறினோம் அல்லவா? அதுபோல் ஒருவர் கிடைப்பாரா என்று நமது ஆள் ஒருவர் தேடிக் கொண்டிருந்தார். ஒருவர் கிடைத்தார்.அவரிடம் இவர் மனதில் உள்ள கஷ்டத்தைச் சொன்னார்.

"சார் ஒருத்தனுக்கு ஒருத்தி என்பது மிகவும் நல்ல பண்பாடு சார். அதைப்பற்றித் தெரிந்து-கொள்ளாமல் போன தால் இன்று நான் அவஸ்தைப்படுகின்றேன். எனக்கு இரணடு மனைவி சார். மனம் சரியில்லை. ஏன் சார் இரண்டு மனைவிகளுடன் சந்தோஷமாகக் குடும்பம் நடத்துவது எப்படி? சிறிது கூறுங்களேன்!" என்றார்.

அது எப்படி என்று எனக்குத் தெரியாது! என்றார் அவர். "ஏன்" என்று கேட்டார் இவர். எனக்கு மூன்று மனைவி கள் ஆயிற்றே என்றார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தர்ம அடி

(காரைநகர்)

பெண்களுடன் சேஷ்டை விட்ட இளைஞர் குழுவினருக்கு பொது மக்கள் தர்மஅடி வழங்கியுள்ளனர். இச்சம்பவம் அண்மையில் காரை நகரில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, காரைநகர் பயிரிக் கூடல் கிராமத்தில் ஆலயமொன்றில் வருடாந்த மஹோற்சவம் இடம்பெற்று வருகின்றது. இரவுநேரத் திருவிழாவின் போது ஆலயத்துக்குச் சென்ற இளம் பெண்கள் மீது இளைஞர்கள் மூவர் கொண்ட குழுவினர் சேஷ்டை விட்டுள்ளனர். இதனை அவதானித்த அக் கிராம இளைஞர்கள் சம்பந்தப்பட்ட மூன்று இளைஞர்களையும் எச்சரித்து தர்மஅடி வழங்கி யள்ளனர். (கி-246)

# இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மோசமாகப் பாதிப்பு!

## உலக வங்கிப் பிரதிநிதி அபாய அறிவிப்பு

(கொழும்பு)

இவவாண்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் எதிர்பார்த்த அளவை விட மிகவும குறை வடைந்துள்ளதாக உலக வங்கியின் இலங்கைக் கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் தெரி வித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் இவ்வாண டில் 7 முதல் 8சதவீதமாக இருக்குமென முன்னர் கணிப்பிடப்பட்டிருந்தது. ஆயினும், தற்போது இவ் வளர்ச்சி வீதம் 4 முதல் 5 சதவீதமாகக் குறை வடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

கடநத ஆண்டு நவம்பர் மாதம் 4ஆம்திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டின் முக் கிய அமைச்சுக்களான பாதுகப்பு , உள்துறை மற் றும மக்கள் தொடர்பாடல் ஆகியவற்றைப் பொறுப பேற்றமையும் அதனைத் தொடர்ந்து கடந்த 7ஆம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டு,எதிர்வரும் ஏப்ரலில் பொதுத்தேர்தல் என அறிவித்தமையும் ஸ்திரமற்ற அரசியல் சூழலுமே இப் பொருளாதார வளர்ச்சி வீதக் குறைவுக்கு முக்கிய காரணமாகும்.

அத்துடன், எப்போதுமில்லாதவாறு 1.5 சதவீத மென இருந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சி கடந்த வருட இறுதியில் மிகவும் விரிவுபடுத்தப் படும் நிலையில் இருந்தது. ஆயினும், தற்போது பொருளாதார வளர்ச்சி எதிர்பார்த்த அளவை விடக் குறைவடைந்துள்ளதால், இது நாடளாவிய ரீதி யில் உள்ள ஒவ்வோர் குடும்பத்திற்கும் 10 ஆயி ரம் ரூபாவரையில் பொருளாதார இழப்பை ஏற்படுத் தவுள்ளது என பீற்றர் ஹரோல்ட் மேலும் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, இப்பொருளாதார வீழ்ச்சி தொடர்ந் தும் இருக்குமானால், அடுத்த ஆண்டில் நாட்டின் நிலைமை மிகமோசமாகப் பாதிக்கப்படும் என்பது டன், தொடர்ந்துவரும் ஆண்டுகளிலும் இந் நிலைமை தாக்கம் செலுத்தும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-18)

# பிரபா-பிரதமர் ஒப்பந்தம் புதிய முன்னணியை பாதிக்காது

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திற்கும தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்த புரிந்து ணாவு உடன்படிக்கை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடை யில் ஏற்படுத்தப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தைக் கட்டுப்படுத்தாது என மக்கள் விடுதலை முன் னணியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பத்திரிகையொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கை யிலேயே விமல் வீரவன்ச இவ்வாறு குறிப்பிட் டுள்ளார்.



அவர் தொடர்ந்தும் கருத் துக் கூறுகையில், பிரதமர் ரணில் அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக் கும் இடையில் செய்து கொள்ளப் பட்ட புரிந்துணர்வு உடன்படிக் கையை ஐக் கிய மக்கள் சுதநதிர முன்னணி நிராக ரிக்கிறது. ரணிலுடன் செய்துகொள்ளப்பட்ட அவ் உடன்படிக்கை போன்று , புதிதாக ஓர் உடன் பாடு விடுதலைப் புலிகளுடன் செய்துகொள் ளப்படவேண்டும்.

தற்போது நடைமுறையிலுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை மக்கள் விடுதலை முன்னணி எப்போதுமே முற்றுமுழுதாக நிராகரித்து வந்துள் ளது. தேசிய பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக் கக் கூடியது என்பதாலேயே இவ் உடன்படிக்கை தொடர்நதும் நிராகரிக்கப்பட்டு வந்தது. எனவே புதிதாக ஓர் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட வேண்டி யது மிகவும் அவசியமாகும். எனக்குறிப் பட்டுள் ளார். (தி-18)

## இராசிபலன்

16. 02. 2004

(மாசி 04, திங்கட்கிழமை)

| | |
|---|---|
| ஏகாதசி | முன்னிரவு 10.19 மணிவரை |
| மூலம் | முன்னிரவு 6.46 மணிவரை |
| இராகுகாலம் | 8.03-9.33 மணிவரை |
| சுபநேரம் | 12.33-2.03 மணிவரை |

ஏகாதசி விரதம்

**மேடம்**
சரீரப்பிரயாசை, பிரயாணம், பிதாசிந்தை, எடுத்த காரியம் தாமதமாகும்.

**இடபம்**
எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், நிலைமாற்றம், உடல் நலக்குறைவு.

**மிதுனம**
களஸ்திர நன்மை, காரியசித்தி, பாராட்டு, தொழில் வருமானம்.

**கடகம்**
தேகநலனில் அக்கறை, செய்தொழில் விருத்தி, முயற்சிகைகூடும், விவேகம்.

**சிங்கம**
வியாபார நன்மை, புத்திரரால் கவலை, எடுத்தகாரியம் தாமதமாகும், தனவிரயம்.

**கன்னி**
மாதாசுகம், மனச்சோர்வு, அதிக பிரயாசை, உடல்நலக்குறைவு,

**துலாம்**
கூட்டு முயற்சி, விருந்தினர் வருகை, பொருள் சேர்க்கை, நல்ல செய்தி.

**விருச்சிகம்**
அதிகவார்த்தை, காரியதாமதம், தன விரயம், மனக்கவலை.

**தனுசு**
பெரியோர் சந்திப்பு எடுத்த காரியம் கை கூடும், புதிய வீடயம், போசனசுகம்.

**மகரம்**
காரிய அலைச்சல், வீண் வார்த்தை, தன விரயம், உடல் நலக்குறைவு,

**கும்பம்**
பெருமையடைதல், தனலாபம், முயற்சி கை கூடும், பிறர் உதவி.

**மீனம்**
தொழிலில் ஆர்வம், போசனசுகம், காரிய அனுகூலம், பாராட்டு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

## ரயில் சேவையை மீளமைக்க ஜனாதிபதி நடவடிக்கை

(கொழும்பு)

இங்கிலாந்து, ஜப்பான், பிரான்ஸ் போன்ற அபி விருத்தியடைந்த நாடுகளில் அரசாங்கத்தின் கீழ புகையிரத சேவை வெற்றிகரமாக நடைபெற்று வரு வதைப்போல் நாட்டின் புகையிரத சேவையின் முகா மைத்துவக் கட்டமைப்பில் மாற்றங்கள் ஏற் படுத்தி, நஷ்டங்களைக் குறைத்து லாபத்தினால் இயங்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்கப்போவ தாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித் துளளார்.

15 புகையிரத சேவை தொழிற்சங்கப் பிரதி நிதிகளுடனான கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற இச்சந்திப் பின் போது ஜனாதிபதி மேலும் தெரிவித்திருப்ப தாவது,

இலங்கை புகையிரத சேவையில் தற்போது நில வும் குறைபாடுகள் குறித்து புகையிரத சேவை தொழிற் சங்கப் பிரதிநிகள் என்னிடம் சுட்டிக்காட் டியிருந் தனர். புகையிரத சேவையில் தற்போதுள்ள பிரச்சி னைகள் உண்மையில் தீர்த்துவைக்கப்பட வேண்டும. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் எல்லாவற் றிலும் அரசின் கட்டுப்பாட்டின் கீழேயே புகையிரத சேவை இடம்பெறுகிறது என்று தொழிற் சங்கப் பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி கூறியுளளார். (வ)

## கணனி மயப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

அபிவிருத்திக்கான சமூகசேவை நிறுவனங் களின் வலையமைப்பு நிறுவனம் கிடைப்பதற்கு அாிதான மறுபதிப்பு இல்லாத தமிழ் நூல்களை இலவசமாக கணனியில் பதிவுசெய்து வருகிறது.

இத்தகைய பழந்தமிழ் நூல்களை வைத் திருப்பவர்கள் 525/2கே.கே.எஸ்.வீதி யாழ்ப் பாணம். (மில்க்வைற் சோப் தொழிலகம்) என்னும் முகவரியுடன் தொடர்பு கொண்டு கணனியில் பதிவுசெய்து கொள்ளலாம். (தி)

ஆய்ந் தாய்ந்து கொள்ளாதான் கேண்மை
கடைமுறை
தான்சாந் துயரம் தரும். -குறள்

வலம்புரி

## சிங்கள மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்

சமாதானத்தை விரும்புகின்ற கட்சிக்கே சிங்கள மக்கள் வாக்களிப்பார்கள் என விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தமிழ்ச்செல்வனால் வெளியிடப்பட்ட நம்பிக்கை குறித்து சிங்கள மக்கள் இரண்டு விடயங்களை கருத்தில் கொள்வது அவசியமாகும்.

அதாவது விடுதலைப்புலிகள் சமாதானத்தின் மீது கொண்டுள்ள பற்றுறுதியின் வெளிப்பாடு ஒன்று, மற்றையது சமாதான விடயத்தின் சிங்கள ஆட்சியாளர்களைவிட சிங்கள மக்களையே விடுதலைப்புலிகள் நம்புகின்றனர். இந்த இரண்டு விடயங்களும் தமிழ்ச்செல்வன் வெளியிட்ட நம்பிக்கையில் இருந்து சிங்கள மக்கள் புரிந்துகொள்ள வேண்டிய முக்கிய விடயமாகும்.

கடந்த 2001ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சமாதானத்துக்கான யுத்தம் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியும், சமாதானத்திற்கான பேச்சுவார்த்தையென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியும் பிரசாரம் செய்தன.

இதில் சிங்கள மக்கள் சமாதானத்திற்கான யுத்தம் என்பதை அடியோடு நிராகரித்து சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைக்கே இடம்கொடுத்தனர். இவ்வாறு சமாதானத்திற்கு சிங்கள மக்கள் கொடுத்த முன்னுரிமை, தமிழர்களின் விடயத்தில் சிங்கள மக்கள் கொண்டிருந்த கடந்தகால அணுகுமுறை மாற்றம் தெளிவாகியது.

அதாவது கடந்த காலங்களில் எந்தக்கட்சி தமிழ் மக்களுக்கெதிராக கோஷம் எழுப்புகின்றதோ அதேகட்சிக்கே சிங்கள மக்கள் வாக்களித்தனர். இதனால் இனவாதக்கட்சிகள் ஆட்சிபீடம் ஏறி தமிழர்களின் உரிமைகளை-உடைமைகளை கபளீகரம் செய்தன. இதன் விளைவாக ஏற்பட்ட யுத்தம் நாட்டில் பேரழிவைத் தந்தது. நாடு மீளமுடியாத அளவில் பாதிப்படைந்தது. இந் நிலைமை சிங்க மக்களிடம் ஓர் மனமாற்றத்தை ஏற்படுத்தியது.

இலங்கை சிங்கள பௌத்த தேசம். இங்கு வாழும் தமிழர்களோ வந்தேறு குடிகள். இவர்கள் சிங்களவர்களின் அடிமைகள் என்ற போதனைகள் காலத்திற்கு காலம் சிங்கள ஆட்சியாளர்களாலும், பௌத்த பீடங்களினாலும் ஓதப்பட்டன.

இவ்வாறு சிங்கள மக்களின் செவிகளில் ஓதப்பட்ட பிரசாரங்களால் அவர்கள் எதுவித காரண காரியமும் இன்றி தமிழ் மக்கள் மீது ஆத்திரம் கொண்டனர். தமிழர்கள் என்றால் அவர்கள் நசுக்கப்பட வேண்டியவர்கள் என்ற எண்ணமும் வலுப்பெற்றிருந்தது. இத்தகைய மன உணர்வுகள் அவ்வப்போது வன்முறைகளாக, இனக்கலவரங்களாக வெடித்து தமிழர்களை சூறையாடியது.

இவ்வாறு தமிழ் மக்கள் சிங்கள பேரினவாதத்தால் நசுக்கப்பட்ட போதெல்லாம் சிங்கள புத்திஜீவிகள் மௌனம் சாதித்தனர். பௌத்த அமைப்புகள் எக்காளமிட்டன. சர்வதேச நாடுகள் உள்விவகாரம் என்று உறங்கிவிட்டன.

இதனால் கொதித்தெழுந்த தமிழ் இளைஞர்கள் தங்கள் தோள்களில் ஆயுதங்களை ஏந்தி போர்க்களம் புகுந்தனர். அகிம்சைக்கு அகிம்சை, ஆயுதத்திற்கு ஆயுதம் என்ற தத்துவம் வெற்றி கண்டது.

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் சிங்கள ஆட்சியாளர்களுக்கு சினத்தை ஏற்படுத்தியிருந்தாலும், சிங்கள மக்களிடையே அது பெரும் மனமாற்றத்தை உண்டு பண்ணியது.

எந்தப் பிரசாரத்தாலும், மாற்றமடைய முடியாதவாறு, தமிழர்களுக்கு எதிராக கடும் போக்கைக் கொண்டிருந்த சிங்கள மக்கள் ஆயுதப் போராட்டத்தினால் மனமாற்றம் அடைந்தனர்.

தமிழ் மக்களின் கோரிக்கைகள் நியாயமானவை, அவர்களும் இந்த நாட்டின் பிரஜைகள்-பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பேதம் அழிவைத் தருமே தவிர ஆக்கத்தை ஒருபோதும் தரமாட்டாது என்ற உண்மைகள் உணரப்பட்டன. அதன் விளைவாக சமாதானத்திற்கான யுத்தம் என்ற கட்சி ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டது.

எனினும் தமிழர் விடயத்தில் சிங்கள மக்களிடம் ஏற்பட்ட மனமாற்றம் முழுமை பெறாததின் காரணமாக மீண்டுமோர் தேர்தல் நாட்டில் தலைதூக்கியுள்ளது. இது சமாதானத்தில் சிங்கள மக்களின் ஒட்டு மொத்தமான ஆதரவை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பமாகும். இதனையே சு.ப.தமிழ்ச்செல்வனும் தனது நம்பிக்கையூடாக குறிப்பிட்டுள்ளார்.

## முன்பள்ளி பிள்ளைகளின் உடலியல் பண்புகள்

இ.சிவகுமார்

ஆரம்பப் பிள்ளைப்பருவம் என்பது ஒரு குழந்தை கருக்கொண்ட காலத்தில் இருந்து பிறந்து 5 வயதுவரையுள்ள காலத்தைக் குறிக்கும் பருவமாகும். இப்பருவமானது ஒரு பிள்ளையினுடைய முழுமையான வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் சிறந்ததொரு பங்களிப்பை வழங்குகின்றது. பிள்ளைகள் தங்கள் சூழலை நன்கு புரிந்துகொள்ளவும், அது குறித்து விழிப்புணர்ச்சியடையவும், தமது ஆற்றலை நெறிப்படுத்திக் கொள்ளவும் வழிகாட்டப்பட வேண்டிய பருவமாகும். ஒரு பிள்ளையின் சூழலே சரியான உறுதியான நம்பிக்கையுடன் கூடிய வாழ்க்கைக்கான அத்திபாரத்தைப் பெற்றுத் தருகின்றது. இத்தகைய அத்திபாரத்தை அமைத்துக் கொடுக்கவேண்டியது முன்பள்ளி ஆசிரியர்களும், பெற்றோர்களுமாவர் இப்பணியினை அதிகமாக முன்பள்ளி ஆசிரியர்களே சிறந்தசேவையாக வழங்குவர். பெற்றோர்களும் இவ் ஆசிரியருக்கு உதவிசெய்ய முன்வரவேண்டும். முன்பள்ளி ஆசிரியர் தம்மிடம் வரும் பிள்ளைகளின் உடலியல், உளவியல் பண்புகளை அறிந்திருக்க வேண்டியதே அவசியமாகும். அதன்மூலம் தம்மிடம் வரும் பிள்ளைகளை இனங்காணவும், அவர்களின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து செயற்படுத்தவும் அவர்களை நன்கு வழிநடத்தவும் முடியும்.

ஒரு பிள்ளையின் உடல் வளர்ச்சியில் சத்துணவு, ஆரோக்கிய கடமை, ஓய்வும் நித்திரையும், பயிற்சி ஆகியன செல்வாக்குச் செலுத்துகின்ற காரணிகளாகும். இப்பருவத்துப் பிள்ளைகளின் உடலியக்கத்தை நரம்புகள், தசைகள், எலும்புகள் சக்திபெற்று அசைவதற்கும் பாய்தல், ஆடுதல், ஓடுதல், ஏறி இறங்குதல், ஊஞ்சலாடுதல் போன்ற கருமங்களில் மிகத் திறமையாகக் கட்டுப்படுத்திப் பேணும் ஆற்றல் உடையவராகக் காணப்படுவர். அவர்கள் உடல்ரீதியான விளையாட்டுக்களில் அதிக ஆர்வத்துடன் செயற்படுவர். மிகுந்த சுறுசுறுப்பாகவும் காணப்படுவர். பல்வேறு வகையான விளையாட்டுக்களில் புகுத்தக்கூடிய ஆற்றலைப் பெற்றிருப்பர். உதாரணமாக ரயர் ஊடாகக் குனிந்து செல்லுதல், கண்ணைக்கட்டி ஓடிப்பிடித்தல், தவளையோட்டம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

வெறுமனே கேட்பதன் ஊடாக மட்டுமன்றிச் செய்து பார்ப்பதினூடாக உலகை ஆராய்ந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவர். உதாரணமாக இயக்கிப்பார்த்தல், தொட்டுப் பார்த்தல், சுவைத்துப் பார்த்தல், நுகர்ந்து பார்த்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். சிறிய பொருட்களை உருவாக்கும் கைவினைத்திறனை வளர்த்துக்கொள்ளவும் வழிகாட்டப்பட வேண்டியதாகும். உடைகளை அணிதல், உடைகளில் பொத்தான்களைக் கழற்றுதல் , காலணிகளைக் கழற்றுதல், தலை சீவுதல் போன்றவற்றைக் கிரமத்துடன் செய்வர். எனினும், அநேகமானோர் இதற்குக் கூடிய ஆற்றலைப் பெற்றிருப்பர். பொருட்களைக் கையாள்வதில் பௌதீக இயல்புகளை ஆர்வத்துடன் பயன்படுத்துவர். உதாரணமாக ஒரு சித்திரத்தை வரைவதற்குப் பதிலாக தூரிகையின்மூலம் நீண்ட கோடுகளை வரையும் திறனைக் குறிப்பிடலாம்.

இந்த வயதுப் பிள்ளைகள் தனித்து விளையாடவே பெரிதும் விரும்புவர். அதே வேளை ஏனைய பிள்ளைகள் தமக்கருகில் சமாந்தரமாக விளையாடுவதையும் விரும்புகின்றனர். இக்காலப்பகுதியில் கூட்டாக விளையாடும் பண்பும் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கும். இந்த விருத்தியானது படிப்படியாக வளர்ந்து செல்லும். இந்த கூட்டு விளையாட்டின் ஆரம்பமானது பெரும்பாலும் இரண்டு அல்லது மூன்றுபேரைக்கொண்ட சிறுகுழுவாகவே காணப்படும்.

யதார்த்தமான வாழ்க்கை நிலைகளை அதிகம் நடித்துக்காட்டக்கூடிய செயற்பாடுகளை அதிக மகிழ்ச்சியுடன் செய்ய முற்படும் பருவம் இதுவாகும். இப்பருவத்துப் பிள்ளைகள் பாத்திரமேற்று உடையணிந்து போலச்செய்வது கண்கூடு. உதாரணமாக அம்மா வேடம், இராணுவம், துப்பாக்கி சுடும் மனிதர், ரோபோ, வள்ளுவர் போன்றவற்றைக் குறிப்பிடலாம். நவீன உடைப்போட்டியில் பங்குபற்றித்தானும் ஒரு பாத்திரமேற்றிட அதிகம் விரும்புவர். கட்டளைகளை விடுத்தல் மூலமாகவும், ஏற்றுக்கொள்ளல் மூலமாகவும் ஒருங்கிணைந்து விளையாடும் பருவம் இதுவாகும்.

தமக்குப் பொருத்தமான சமூகச் சூழல் காணப்படும் போது மட்டுமே பிள்ளைகள் எதனையும் பகிர்ந்துகொள்ள விரும்புவர். தனது முறைவரும்வரைக்கும் காத்துநிற்றல், மற்றவர்களுடன் ஈடுபாடு கொள்ளுதல் போன்ற சமூக நடத்தைகள் குறித்துக் கற்றுக்கொள்ள ஆரம்பிக்கின்றனர். சந்தர்ப்பமேற்படுமிடத்து நண்பர்களுடன் மனப்பூர்வமாகத் தமது விளையாட்டுப் பொருட்களைப் பகிர்ந்துகொள்ளவும் விரும்புகின்றனர். இவ்விதமாக உடல்ரீதியான பண்புகள் படிப்படியாக வளர்ந்துவரும். இத்தகைய பண்புகளை இனங்கண்டு பொருத்தமான முறையில் நல்வழிப்படுத்திட வேண்டியது முன்பள்ளி ஆசிரியரின் பொறுப்பும் கடமையுமாகும். □

## மிதிவெடி அகற்றப்பட்ட நிலப்பகுதி கையளிப்பு

(திருநெல்வேலி)

பருத்தித்துறைக் கற்கோவளம் பகுதியில் மிதிவெடிப் பொருட்கள் அகற்றப்பட்ட குறிப்பிட்டளவு ஓர் நிலப்பகுதி, நேற்றுக்காலை அப்பகுதியில் மிதிவெடியகற்றும் பணிகளில் ஈடுபடும் டெனிஷ் டீமைண்டிங் குறூப்பினால் கையளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கற்கோவளம் பகுதியில் புதைக்கப்பட்டிருந்த மிதிவெடிகளை அகற்றும் பணிகளில் கடந்த சில மாதங்களுக்கு முன்பிருந்தே டெனிஷ் டீமைண்டிங் குறூப் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில், முற்றாக மிதிவெடிப் பொருட்கள் அகற்றப்பட்ட குறிப்பிட்டளவு ஓர் பிரதேசமே நேற்றையதினம் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் சி.சிவசுவாமியிடம் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி-43)

## முறைசாராப் பயிற்சி

(பண்ணாகம்)

வலிகாமம் கல்வி வலயத்தின் அனுசரணையுடன் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் வானொலி, தொலைக்காட்சி திருத்துதல் போன்ற முறைசாரப் பயிற்சி நெறி ஒன்று நாளை காலை 10.00 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் இணைய விருமபுவோர் அன்றைய தினம் சுயவிபரங்களுடன் கல்லூரிக்கு சமூகமளிக்குமாறு கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (தி-76)

## கட்டடங்கள் திறந்துவைப்பு

(மருதங்கேணி)

முல்லைத்தீவு நகரில் புனரமைப்புச் செய்யப்பட்ட நிறைவேறறுப் பொறியியலாளரின் பணிமனை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரி சபைப் பணிமனை ஆகியன கடந்த புதன்கிழமை திறந்துவைக்கப்பட்டுள்ளது. (தி-35)

### தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

யார் ஒருவன் தனக்கு உள்ள கௌரவமும் மரியாதையும் போய்விடுமோ என்று பயந்தபடி இருக்கின்றானோ அத்தகையவன் அவமானத்தைத்தான் அடைகிறான்.

ஓய்வு ஒழிவு இல்லாமல் வேலைகளைச் செய்து கொண்டே இரு. ஆனால் அந்த வேலைகளுக்குள் நீ கட்டுப்பட்டு விடாதே. அதற்குள் சிக்கிக் கொள்ளாதே என்பதே கீதையின் உபதேசமாகும்.

சுவாமி விவேகானந்தர்

## திருடர் தொல்லை அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

அரியாலை மற்றும் கொழும்புத்துறைப் பகுதிகளில் அண்மைக்காலமாகத் திருடர் தொல்லை அதிகரித்துள்ளது.

அண்மையில் கொழும்புத்துறை நெடுங்குளம் வீதியில் உள்ள வீடொன்றில் இருந்து கையடக்கத் தொலைபேசி, இரு துவிச்சக்கர வண்டிகள் உட்பட ஒருதொகைப் பணம் எனபன களவாடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (தி-51)

## சிவராத்திரியை முன்னிட்டு விசேட பஸ்சேவை

(யாழ்ப்பாணம்)

மகா சிவராத்திரி தினத்தை முனனிட்டு திருக்கேதீஸ்வரத்திற்குச் செல்வதற்காக வடபிராந்திய போக்கு வரத்துசபை விசேடசேவை ஒன்றை நடாத்தவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.00மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரையும் யாழ்ப்பாணத்தில் இருந்து திருக்கேதீஸ்வரத்திற்கு 5 பேருந்துகள் விசேட சேவையில் ஈடுபடவுள்ளதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் எஸ்.மணிவாசகர் அறிவித்துள்ளார். (தி-18)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ.மாவட்ட அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலயமைப்புச் செயலகத்தில் எதிாவரும் 21ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.10.00மணிக்கு "யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் திட்ட நடவடிக்கைகள்" குறித்த விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

யாழ்.மாவ்ட்டத்தில் உள்ள 50 கிராமிய மட்ட நிறுவனத்தலைவர்கள கலந்துகொள்ளவுள்ள யு.என்.எச்.சி.ஆர்.நிறுவனத்தின் யாழ. மாவட்ட வெளிக்கள காரியாலயத்தின் தலைமை அதிகாரி கே.சுகி முறாட்டா திட்ட நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி-18)

## போதைப்பொருள் பணியகத்தை அகற்றுவதற்கு முயற்சி

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானநிலையத்தில் உள்ள பொலிஸாரின் போதைப்பொருள் தடுப்பு பணியகத்தை அகற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்விமான நிலையத்தில் உள்ள பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்தில் கடமையாற்றும் அதிகாரிகளால் இலங்கைவரும் பயணிகள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர் என விமானநிலையப் பாதுகாப்பு அதிகாரி, போதைப்பொருள் தடுப்புப் பணியகப் பணிப்பாளருக்கு அறிவித்தமையினையடுத்தே பணியகத்தை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி விமான நிலையத்தில் உள்ள போதைப்பொருள் தடுப்புப் பிரிவை அகற்றினால் பெருமளவு போதைப் பொருட்களை இலங்கைக்கு கடத்தும் வாய்ப்பு அதிகரித்துவிடும் எனவும அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.(தி-60,10)

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட் களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.: 021 222 3916 0777 801038
கொழும்பு: T.P.: 2390128 Fax: 2399650 Mob: 0777 517019

# 4.5 பில்லியன் டொலர் நிதியுதவியில் ஒரு பில்லியனை அரசு பெற்றுவிட்டது

## உலக வங்கிப்பிரதிநிதி ஹறோல்ட்

(கொழும்பு)

கடந்த வருடம் டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் உறுதி அளிக்கப்பட்ட 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்களில் தற்போது இலங்கை ஒரு பில்லியன் டொலர்வரை பெற்றுவிட்டது என உலக வங்கியின் இலங்கைத் தூதுவர் பீற்றர் ஹறோல்ட் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை இன்னமும் 3.5 பில்லியன்களைப் பெறமுடியும் இத்தொகையை 4வருடங்களில் வழங்க உறுதியளிக்கப்பட்டிருந்தது. ஆனால இவ்வருடத்திற்கான தொகை பெறப்பட்டுவிட்டதா? என்பது பற்றி உறுதியாகக் கூற முடியாது என்றும் தெரிவித் தார். ஆயினும் இலங்கை அரசாங் கம் ஏற்கனவே பெறப்பட்ட தொகை பற்றிப் பெரிதாக ஒருவரும் குறிப் பிடுவது இல்லை என்றார்.

ஏற்கனவே பெறப்பட்ட ஒரு பில்லியன் டொலர்களில் 300 மில்லியன் அமெரிக்கன் டொலர்கள் நிகழ்ச்சித் திட்டங்களுக்காகவும் 700 மில்லியன் அமெரிக்க டொலாகள் செயற்திட்டங்களுக்காகவும் பெறப்பட்டுள்ளது. இலங்கை ஒவ்வொரு மாதமும் 60 மில்லியன் அமெரிக்கன் டொலர்களை செயற்திட்டங்களுக்காகப் பெற்று வருகின்றது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதால் வரவு செலவுத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியுதவியைப் பெறமுடியாததாகிவிட்டது. இவ்வாறு பீற்றர் ஹறோல்ட் தெரிவித்தார். (த-6)

### சமுர்த்திச செயலணி அங்குரார்ப்பணம்

(கல்வயல்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள மட்டுவில் வடக்கு (ஜே/313) கிராம உத்தியோகத்தர் பிரிவில் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணிக்கு ஸ்ரீவேற்பிள்ளை சன சமூக நிலைய மண்டபத்தில் பிரதேச செயலர் கே.ஸ்ரீநிவாசன் தலைமையில் சமுர்த்திச் செயலணி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது. (தி-36)

### மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு கேவில் அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு அதிபர் வ.நின்மதிராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக வடமராட்சி கிழக்கு கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன் கலந்துகொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினராக மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளையும் சிறப்பு விருந்தினராக கல்விக்கழகப் பொறுப்பாளர் கி.தாயகன், வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் ததீபன், மருதங்கேணி காவல் பணிமனைப் பொறுப்பதிகாரி சி.சிவகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

★ ★

(பாசையூர்)

அராலி இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ரெஜினா இருதயநாதனும் சிறப்பு விருந்தினர்களாக த.யோகேந்திரராஜா, நா.அரியபுத்திரர் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-72)

### வீர வணக்கக் கூட்டம்

சுகவீனம் காரணமாக வீரச்சாவடைந்த நாட்டுப்பற்றாளர் இரகர் என்றழைக்கப்படும் யாழ்ப்பாணம் நாயன்மார்க்கட்டைச்சேர்ந்த காசிப்பிள்ளை கார்த்திகேயனின் வீரவணக்கக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. நாயன்மார்கட்டு சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற வீரவணக்கக் கூட்டத்திற்கு இராசா இராசகுல சூரியர் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தின் பொதுச் சுடரினை யாழ்.நல்லூர் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் ஏற்றிவைத்தார்.

நினைவுரைகளை இராசஇராஜேஸ்வரி ஆலய இணையச் செயலாளர் க.சிவராசா, மகேஸ்வரி வித்தியாலய ஓய்வு பெற்ற அதிபர் க.சண்முகலிங்கம், மூதறிஞர் சொக்கன், பாரதி சனசமூக நிலைய நிர்வாக உறுப்பினர் கனகரத்தினம் ஆசிரியர் துரைராசா, யாழ்.மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி கலைவிழி ஆகியோர் நிகழ்த்தினர். (ச-121)

# ஜனாதிபதியும், பாராளுமன்ற ஆட்சியும் ஒரே கட்சியாக இருக்க வேண்டும்

## ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளே விருப்பம்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும் பாராளுமன்ற அதிகாரமும் ஒரே கட்சியின் கீழ் இல்லாவிட்டால் அரசாங்கத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல முடியாது என்று பொதுஜன ஐக்கிய ம்முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

மஹரவில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாடு ஒன்றில் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்,

இந்தநாட்டில் 1978ம் ஆண்டு முதல் இதுவரை நடாத்தப்பட்ட தேர்தல்கள் மூலம் நாட்டை ஆட்சிசெய்த அரசாங்கங்களின் ஜனாதிபதிகளாக இருந்த ஜே.ஆர் ஜெயவர்த்தனா, ஆர்.பிரேமதாஸா ஆகியோர்களின் காலத்தில் ஐ.தே.கட்சி ஆட்சியை நடத்தியது.

இதேபோல ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சியின் போது அவரது ஆட்சியே அரசாங்கத்தையும் நடத்தியது. இக்காலங்களில் எவ்வித சிக்கல்களும் இன்றி ஆட்சி நடைபெற்றது.

ஆனால், ஆட்சி அதிகாரமும், நிறைவேற்று அதிகாரமும் வெவ்வேறு இடத்தில் இருக்கும் போது பலசிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இதனை ஐக்கிய தேசியக்கட்சி உணர்ந்து கொள்ளவேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ம)

### இளைஞர்கள் மூவரை அலை அடித்துச் சென்றது

கடல் அலையில் சிக்கிய மூன்று இளைஞர்கள் கடல் அலையினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

காத்தான்குடி கடற்கரையில் நேற்று காலை 9 மணியளவில் விளையாடிக்கொண்டிருந்த 4 இளைஞர்கள் கடலுக்குள் சென்ற பந்தை எடுக்கச் சென்ற போது அலையினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்கள்.

இந்த 4 இளைஞர்களில் ஒருவர் மட்டும் உயிருடன் கரைசேர்ந்ததாகவும் ஏனைய மூவரும் கடலில் மூழ்கியிருக்கலாம் என்று சந்தேகிப்பதாகவும் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். (ச)

**28 வரையான...**

கொள்கைகளை உடையவை. இத்தேர்தலில் ஐ.தே.முன்னணியோ அல்லது புதிய கூட்டணியோ பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை பெற்றவிடாது. இவ்வருடம் 23-28 வரையான விடுதலைப் புலிகள் பாராளுமன்றத்தினுள் ஊடுருவுவார்கள் இனிமேல் வடக்கு, கிழக்கை பாதுகாக்கும் எதிர்பார்ப்புக்கள் எல்லாம் அற்றுப் போய் விடும்.

குறைந்தது 5 அல்லது 6 உண்மையான சிங்களவர்களை யாவது பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யுங்கள் என அவர் பொது மக்களிடம் விசேட வேண்டுகோளையும் விடுத்தார். (த-6)

**தலைவருடன்...**

ஏற்பட்டுள்ள பின்னடைவுகள் குறித்து விளக்கியுள்ளதாகவும் கூறினார்.

தேர்தலில் போட்டியிடவுள்ள தமிழ் அரசியல் கட்சிகளின் தேர்தல நடவடிக்கைகள் குறித்து அக்கட்சிகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பொன்றை அடுத்தவாரம் மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ச)

### 15 வயது இலங்கை அணி இன்று மலேசியா பயணம்

15 வயதுக்குட்பட்ட இலங்கைக் கிறிகெற் அணி இன்று மலேசியாவுக்குப் புறப்படுகின்றது. இலங்கைப் பாடசாலை கிறிக்கெற்சபை தெரிவுசெய்த இவ்வணியினர் மலேசியாவில் மூன்று ஒருநாள் சர்வதேசப்போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளனர். இந்தக் குழுவிற்கு கிறீன்சி கல்லூரியைச் சேர்ந்த சச்சின் பத்திரன தலைமை தாங்கிச் செல்கிறார். (ச-121)

## கப்பி அறுந்ததனால்

# கிணற்றில் தவறி விழுந்து வயோதிபப் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் தண்ணீர் அள்ளிய போது கப்பி அறுந்து விழுந்ததினால் வயோதிபப் பெண்ணொருவர் கிணற்றினுள் தவறி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்ற இச்சம்பவத்தில் நவாலி வடக்கு சோமசுந்தரப் புலவர் வீதியைச் சேர்ந்த பொ.அரியமலர் (வயது 77) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

மரண விசாரணைகளின் பொருட்டு சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் மானிப்பாய் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டது. மரண விசாரணையின் பின்னர் சடலம் நேற்றுமாலை உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (த-19)

**முன்னாள்...**

என ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே தெரிவித்துள்ளார். ஆயினும், ஜெயராஜ் உட்பட இவர்கள் ஏற்கனவே ஐ.தே.முன்னணிக்கான தமது ஆதரவைத் தெரிவித்துவிட்டனர் என்றும் தம் பெயர்கள் பொ.ஐ.மு. வேட்பாளர் பட்டியலில் ஏற்கனவே இடம்பெற்றுவிட்டதா என்பதை அறிவதற்காகவே காத்திருக்கின்றனர் என ஐ.தே.மு. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்களுள் பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவர் தெரிவிக்கையில்: புதிய கூட்டணி உருவாக்கப்பட்டதால் நாம் அதிருப்தி அடைந்துள்ளோம். அண்மையில் பலர் ஐ.தே.முவில் இணையும் வாய்ப்புக்கள் உள்ளன. எனினும், எம்மில் பலர் ஜே.வி.பினரின் நடவடிக்கைகளால் எமது குடும்ப அங்கத்தவர்களை கட்சி உறுப்பினர்களை இழந்துள்ளோம் என்றார். (த-6)

**கூட்டமைப்பிற்கான...**

தேர்தலில் போட்டியிடும் சின்னத்தை தெரிவு செய்வதை புதன்கிழமை வரை ஒத்திவைப்பதென நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

சுமார் 2மணிநேரம் நடைபெற்ற இக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் இரா. சம்பந்தன், யோசப் பரராஜசிங்கம், என்.ரவிராஜ், மாவை சேனாதிராசா ஆகியோரும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார்பில் அ:விநாயகமூர்த்தி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ந.குமரகுருபரன் ஆகியோரும், ரெலோவின் சார்பில் செல்வம் அடைக்கலநாதன், பிரசண்ணா, என்.சிறிகாந்தா மற்றும் ஈ.பி.ஆர். எல்.எவ் (சுரேஸ் அணி) சார்பில் சுரேஸ் பிரேமச்சந்திரனும் கலந்து கொண்டனர்.

இதேவேளை 18ம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கூட்டத்தில் தேர்தலில் போட்டியிடக்கூடிய வேட்பாளர்கள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது. (ம)

**எதிர்வரும்....**

காக வாக்களித்த மக்களின் தேவைகளை உணர்ந்து அதற்கேற்ற வகையில் சேவை செய்துள்ளேன். எனது சேவைக் காலத்தில் எந்த விதமான களங்கத்திற்கும் இடமளிக்கவில்லை.

எனினும் இம்முறை நடைபெறவுள்ள தேர்தலில் இருந்தும் யாழ். குடாநாட்டு அரசியலில் இருந்தும் ஒதுங்கியிருக்கத் தீர்மானித்துள்ளேன்.

என்னைப் பொறுத்தவரையில் காரைநகருக்கு பிரதேச செயலகமும், பிரதேச சபையும் புதிதாக அமைக்க வேண்டும் என்ற எனது விருப்பம் நிறைவேறாமல் போகிறது என்பதுதான் எனது கவலை. இருந்தாலும், எதிர்காலத்தில் எனக்குக் கிடைக்கின்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அந்த பணிகளைச் செய்து முடிப்பேன் என்று கூறிய முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன், மின்சார வசதி, குடிநீர்வசதி, வீடமைப்பு வசதி போன்றவற்றையும் எனது மக்களுக்குச் செய்து கொடுப்பேன் என்றும் கூறினார்.

இவ் வைபவத்தில் கூட்டுறவாளர்கள் பொது மக்கள் பெருமளவில் கலந்துகொண்டனர். (ம-246)

சமாதானத்தின் முன்னோடி
அமரர் விஜய் குமாரதுங்கா
அவர்களின் பதினோராவது நினைவஞ்சலி



யாழ் மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நடத்துகின்ற நினைவஞ்சலிக் கூட்டம் கட்சிப் பணிமனையில் 16.02.2004 இன்று காலை 8 மணியளவில் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து அக்கட்சியின் தொகுதி அமைப்பாளர்களும் மத்தியகுழு, செயற்குழு உறுப்பினர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டு அன்றைய நினைவஞ்சலியை சிறப்பிப்பார்கள்.

நிர்வாகம்
ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி
யாழ்மாவட்டம்

(C/7273)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.02.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.